Annual Subscription Rs. 90/-

# திருமறை ஆசான்

**புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்**

மலர் - 23 இதழ் - 11 நவம்பர் 2010

தனிப்பிரதி ரூ. 8/-



கிறிஸ்துவின் சபை
காங்கயம் 638 701. தமிழ்நாடு. இந்தியா.
04257 - 230030, 98427 - 30382, 99655 - 30385

*நன்றி!* *நன்றி !!*

கடந்த நவம்பர் 5,6,7–2010 ஆகிய தேதிகளில் மும்பை மாநகர், தாராவி பகுதியில் நடந்த நற்செய்திக் கூட்டங்களும், பகல் நேர வேத வகுப்புகளும் எல்லாவகையிலும் தேவநாம மகிமைக்காய் நடந்தேறியது. தமிழ் மொழி பேசுவோர் தவிர இந்தி, மராத்தி, ஓரியா மொழி பேசுகிறவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இக்கூட்டங்களுக்காகவும், எங்கள் பயண காரியங்களுக்காகவும் ஊக்கமாக ஜெபித்த பரிசுத்தவான்களுக்காகவும், சபையார்களுக்காகவும் நன்றி கூறுகிறோம்.

– **ஆசிரியர்.**

# ஆசானின் அறிவுரையில் ...


1. ஆசிரியர் உரை ........ 1
2. ஏன் நாங்கள் இரட்சிக்கப்பட வேண்டும்? ........ 8
3. பெண்கள் பகுதி ........ 14
4. வாலிபர் பகுதி ........ 17
5. சிறுவர் பகுதி ........ 21
6. வசன அடிப்படையிலான கொடுத்தலுக்கு பலன் ........ 23
7. வசன ரீதியான கிறிஸ்துவின் சபை ........ 27
8. ஆவிக்குரிய வாழ்விற்கான அளவுகோலை ஏற்படுத்துகிறது யார்? ........ 31

# THIRUMARAI AASAAN

S. Rajanayagam
Editor

86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.

Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 23 NOVEMBER - 2010 Issue - 11

ஆசிரியர் உரை

## " மகிமையான நற்செய்தி "

இப்பூவுலகை மீட்கும்படியாய்ப் பரலோக மகிமை துறந்து வந்த இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவின் உபதேசங்களடங்கிய புதிய ஏற்பாட்டில் அழகும், ஆழமும், அர்த்தமும் மிகுந்து காணப் படும் அநேக வார்த்தைகள் உண்டு. அவைகளில் ஒன்று "நற்செய்தி" அல்லது "சுவிசேஷம்" என்னும் திருவார்த்தை. இவ்வார்த்தையைத் தொட்டுத்தான் புதிய ஏற்பாட்டின் ஒட்டு மொத்தச் செய்தியும் அமைந்திருக்கிறது. இவ்வார்த்தையின் பொருளைச் சுற்றித்தான் புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் வலம் வந்துள்ளனர். சுவிசேஷம் அல்லது நற்செய்தி என்றழைக்கப்படும் இவ்வார்த்தை, மூல மொழியாகிய கிரேக்கத்தின் இரண்டு வார்த்தைகளின் கலவையாக உள்ளது. இதற்கான நேரடிப் பொருள், "நல்ல செய்தி" அல்லது "நல்ல அறிவிப்பு" என்பது.

இப்படிப் பொருள் கொண்டிருக்கும் இந் நற்செய்தி வார்த்தை யானது, ஆவியானவரால் பல சிறப்பு வார்த்தைகளைக் கொண்டு அலங்கரிக்கப்பட்டுள்ளது. ஆம், இது, " இரகசியமான நற்செய்தி" (எபே. 6:20), "இரட்சிப்பின் நற்செய்தி " (எபே. 1:13), " சகல சிருஷ் டிகளுக்குமான நற்செய்தி " (கொலோ 1:23), " நித்திய நற்செய்தி " (வெளி. 14:6), " கிருபையின் நற்செய்தி " (அப். 20:24), " வெட்கம் வேண்டாத நற்செய்தி " (ரோமர் 1:16) மற்றும் " மகிமையின் நற்செய்தி " (II கொரி. 4:4) என்றெல்லாம் குறிப்பிடப்பட்டிருக் கிறது. இந்த அடைமொழி வார்த்தைகள் ஒவ்வொன்றுக்கும், நற்செய்திக்குச் சிறப்பு சேர்க்கும் பல பண்புகள் நிச்சயமாகவே

உண்டு. அத்தோடு, நற்செய்திக்கு மேலும் மெருகூட்டும் தனித் தனித் தகுதிகளும், அர்த்தம் தரும் கருத்துகளும் இந்த அடை மொழி வார்த்தைகளுக்கு உண்டு. மேலும், அலங்கார வார்த்தை கள் இப்படி விதவிதமாக பயன்படுத்தப்பட்டிருப்பதற்குப் பலமான காரண காரியங்களும் உண்டு. ஆயினும், அவைகள் எல்லாவற்றையும் பார்க்க இங்கே நமக்கு சமயம் இல்லாதபடியால் " மகிமையின் நற்செய்தி " என்பது பற்றி மாத்திரம் தெரிந்து கொள்ள நம் சிந்தை யைச் செலுத்துவோம்.

அப்போஸ்தலன் பவுலடியார் கொரிந்து பட்டணத்து கிறிஸ்தவர்களுக்கு எழுதின இரண்டாம் நிருபத்தின் நான்காம் அதிகாரத்தில், " மகிமையான நற்செய்தி " பற்றிக் கூறியுள்ளார். இப்பகுதியில், நற்செய்தியோடு " மகிமை " என்ற மகத்தான வார்த் தையை இணைக்க ஆவியானவர் பவுலுக்கு அனுமதி தந்துள்ளார். ஏன் இப்படி எழுத ஆவியானவர் அனுமதித்தார்? இதன் பொருள் தான் என்ன? நற்செய்தி அல்லது சுவிசேஷம், மகிமையை சார்ந்தி ருப்பதே இதற்குக் காரணம். அப்படியானால், அது எந்த மகிமை யை என்ற கேள்வி இங்கே வருகிறது அப்படித்தானே. இதைத் தெரிந்து கொள்ள நாம் அந்த வசனத்தைக் குனிந்து பார்ப்பது அவசியம். " தேவனுடைய சாயலாயிருக்கிற கிறிஸ்துவின் மகிமை யான சுவிசேஷத்தின் ஒளி.... " (II கொரி. 4:4) என்று இவ்வசனத் தில் உள்ளதை நாம் கவனிக்க வேண்டும். இங்கே, நற்செய்தியோடு மகிமையைச் சேர்த்த அப்போஸ்தலன் பவுல், மகிமையோடு "கிறிஸ்துவையும் " இணைத்து, " கிறிஸ்துவின் மகிமையான நற்செய்தி " என்று குறிப்பிடுகிறார். அதாவது, மகிமையானது, கிறிஸ்துவுக்கும், நற்செய்திக்கும் நடுவில் வருகிறது. இதன் பொருள் கிறிஸ்துவிடமிருந்து மகிமை நற்செய்திக்குக் கிடைக் கிறதாகவே உள்ளது. இன்னும் அதாவது, பூவாகிய கிறிஸ்துவிட மிருந்து, மணமாகிய மகிமை, நார் என்ற நற்செய்திக்குக் கிடைத் திருப்பதாகவே உள்ளது. ஆகையால், நற்செய்தியின் மகிமை யாகிய மணத்தை நாம் முழுமையாக நுகர வேண்டுமானால், நற்செய்திக்கு மணம் தந்த நற்செய்தி நாயகராகிய கிறிஸ்துவின் மகிமையை நாம் ஆராய்வது அவசியமாகிறது.

எனவே, கிறிஸ்துவின் மகிமையை நாம் தெரிந்து, புரிந்து அதன் மூலம் நற்செய்தியின் மகிமையை அறிந்து கொள்ள இப்பொழுது முயற்சிப்போம்.

### I. பூமிக்கு வருவதற்கு முன்னான கிறிஸ்துவின் மகிமை

நற்செய்தியின் மகிமையை அறிந்து கொள்ளும் நம்முடைய முயற்சியின் முதல் கட்டமாக, கிறிஸ்து பூமிக்கு வருவதற்கு முன்பாகக் கொண்டிருந்த மகிமை பற்றிப் பார்ப்போம்.

யோவான் பதினேழாம் அதிகாரம் கர்த்தராகிய இயேசுவின் ஊக்கமான ஜெபத்தைத் தாங்கி நிற்கும் ஓர் உன்னத அதிகாரம்.

கர்த்தருடைய ஜெபம் என்று அழைக்கப்படுவதற்கான எல்லாத் தகுதியும் இவ்வதிகாரத்திற்கு உண்டு. ஆனால், கிறிஸ்தவ சமுதாயம் மத்தேயு ஆறாம் அதிகாரத்தில் உள்ள மாதிரி ஜெபத்தை கர்த்தருடைய ஜெபம் என்று இன்றளவும் சொல்லி, வந்துவிட்ட சபையாகிய ராஜ்யம் வருவதாக, வருவதாக என்று திரும்பத் திரும்ப உச்சரித்து, தங்கள் அறியாமையை வெளிப்படுத்துகின்றனர். ஆவிக்குரிய ரீதியில் எல்லாவற்றையும் தலைகீழாகச் செய்யத் தீர்மானித்து விட்ட கிறிஸ்தவ சமுதாயத்தை என்ன சொல்லுவது? சரி, சிலுவைப்பாடுகள் தன்னை எதிர்நோக்கியிருந்த அந்தப் பாரமான வேளையில் ஜெபித்த இந்த ஜெபத்தின் ஊடே, " பிதாவே, உலகம் உண்டாகிறதற்கு முன்னே உம்மிடத்தில் எனக்கு உண்டாயிருந்த மகிமையினாலே இப்பொழுது நீர் என்னை உம்மிடத்திலே மகிமைப்படுத்தும் " (17:5) என்று மன்றாடினார். இந்த மன்றாட்டின் வார்த்தைகளை நாம் ஊன்றிக் கவனித்தால், ஓர் ஏக்கம் அங்கே தெரிவதை நம்மால் உணரமுடியும். ஆம், தான் விட்டு வந்ததை மீண்டும் அடைய, ஒரு குழந்தை தாயின் பாலுக்கு ஏங்குவது போல ஏங்குகிறார். அப்படியானால், அவர் விட்டு வந்த அந்த மகிமை எப்படிப்பட்ட மகிமையாக இருந்திருக்கும்? யாருக்குத் தெரியும் என்கிறீர்களா? நியாயம் தான்.

ஒருவேளை இயேசு தன் உள்வட்டத்துச் சீடர்களாகிய பேதுரு, யோவான், யாக்கோபு ஆகியோரைக் கூட்டிக் கொண்டு மறுரூபமலை என்றழைக்கப்படும் தாபோர் மலைக்குச் சென்று மறுரூப காட்சியைக் காட்டினாரே, அங்கு சென்றால் ஏதாகிலும் நமக்குத் தெரியலாமோ? அப்படியே எதையாவது அங்கே நம்மால் அறிந்து கொள்ள முடிந்தால் கூட, அது வஸ்திரத்தின் ஓரத்தைத் தொடுவது போல் தான் இருக்குமேயொழிய முழுமையானதாக இருக்காது. ஏனெனில், பூமிக்கு வருவதற்கு முன்னான அவரின் மகிமை ஈடு இணையில்லாததாகவே இருந்துள்ளது. எதற்கும் முயற்சிப்போம் வாருங்கள்.

"அவர் ஜெபம் பண்ணுகையில், அவருடைய முகம் மாறிற்று, அவருடைய வஸ்திரம் வெண்மையாகிப் பிரகாசித்தது. அன்றியும் மோசே, எலியா என்னும் இரண்டு பேரும் மகிமையோடே காணப்பட்டு..." என்றுள்ளது (லூக். 9:28). இன்னும், " பேதுருவும் அவனோடிருந்தவர்களும் நித்திரை மயக்கமாயிருந்தார்கள். ஆகிலும் அவர்கள் விழித்து அவருடைய மகிமையையும் அவரோடே நின்ற அவ்விரண்டு பேரையும் கண்டார்கள்" (9:32) என்றுள்ளது. இந்தக் காட்சியை, லூக்கா நற்செய்தியாளன் மாத்திரமல்ல, மத்தேயுவும் (17:2), மாற்குவும் (9:3) தங்கள் நூல்களில் குறிப்பிட்டுள்ளனர். இங்கே, பேதுருவும் அவனோடிருந்தவர்களும் கிறிஸ்துவின் மகிமையைக் கண்ணிமைக்கும் நேரம் கண்டுள்ளார்கள். இது அவர்களுக்குப் பெரும் இன்ப அதிர்ச்சியைத் தந்துள்ளது.

எப்படியெனில், இந்தக் காட்சியை யோவான் அப்போஸ்தலனால் தன் வாழ்க்கையில் மறக்கவே முடியவில்லை. ஆகவே தான், இது நடந்து பல ஆண்டுகள் கழித்து, ஆவியானவரின் துணையோடு தான் எழுதின யோவான் நற்செய்தி நூலில் இப்படியாகக் குறிப்பிட்டுள்ளார். " அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம் பண்ணினார்; அவருடைய மகிமையைக் கண்டோம். அது பிதாவுக்கு ஒரே பேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாக வே இருந்தது " (யோவா 1:14) என்று. பரலோகில் தேவாதி தேவனோடு தான் நித்திய காலமாகக் கொண்டிருந்த இப்படிப் பட்ட மகிமையை மீண்டும் பெற்றுக் கொள்ளத்தான், யோவான் 17-ம் அதிகாரத்தில் ஏக்கத்தோடு மன்றாடினார்.

ஆக, கிறிஸ்துவின் மகிமை உலகத் தோற்றத்திற்கு முன்னானதாக இருக்கிறபடியாலும், அந்தக் கிறிஸ்துவானவர் நற்செய்திக்குக் காரணமானவராக இருக்கிறபடியாலும், நற்செய்தியானது " மகிமையின் நற்செய்தி " என்றழைக்கப்படுவது எல்லாவகையிலும் பொருத்தமாகவே உள்ளது.

## II *நித்திய மகிமைக்குச் சொந்தமானவரின் பூலோக வருகை*

நற்செய்தியின் மகிமையை அறிந்து கொள்ளும் நம்முடைய முயற்சியின் அடுத்த கட்டமாக, நித்திய மகிமைக்குச் சொந்தமானவரின் பூலோக ஊழியம் பற்றிப் பார்ப்போம்.

இப்படி நித்திய மகிமைக்குச் சொந்தமாக இருந்த இயேசுவைப் பிதாவானவர் இப்பூமிக்கு அனுப்பினார். ஆம், யோவான் 3:16-ல், " தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார் " என்று பார்க்கிறோம். இப்படியாக வந்த இயேசுவானவரின் மகிமை பற்றி அப்போஸ்தலனாகிய பவுலடியார் தன்னால் நேசிக்கப்பட்ட பிலிப்பு பட்டணத்து சபையாருக்கு எழுதும் போது இப்படியாகக் கூறுகிறார். " அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார் " (பிலி. 2:6,7) என்று.

இயேசுவானவரின் இந்த மகிமையை, அவர் இப்பூவுலகம் வருவதற்கு முன் சுமார் 700 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த ஏசாயா தீர்க்கன் அவருடைய மகிமையைக் கண்டதாக யோவான் அப்போஸ்தலன் கூறுகிறார். "அவர்கள் கண்களினால் காணாமலும், இருதயத்தினால் உணராமலும், குணப்படாமலும் இருக்கும் படிக்கும், நான் அவர்களை ஆரோக்கியமாக்காமல் இருக்கும்

படிக்கும், அவர்களுடைய கண்களை அவர் குருடாக்கி, அவர்கள் இருதயத்தைக் கடினமாக்கினார் என்றான். ஏசாயா அவருடைய மகிமையைக் கண்டு, அவரைக் குறித்துப் பேசுகிறபோது இவைகளைச் சொன்னான் " என்று (யோவான் 12:41). அதுமாத்திரமல்ல, இயேசு தம்முடைய மகிமையை தமது செயல்களின் மூலம் பூமியில் வெளிப்படுத்தினார் என்று யோவான் 2:11-லும் பார்க்கிறோம். "இவ்விதமாக இயேசு இந்த முதலாம் அற்புதத்தைக் கலிலேயாவிலுள்ள கானா ஊரிலே செய்து, தம்முடைய மகிமையை வெளிப்படுத்தினார்; அவருடைய சீஷர்கள் அவரிடத்தில் விசுவாசம் வைத்தார்கள்".

தமது நித்திய மகிமை துறந்து பூமிக்கு வந்து, தம்முடைய மகிமையை வெளிப்படுத்தின இயேசுவானவர், ".....மனந்திரும்புங்கள், பரலோக ராஜ்ஜியம் சமீபித்திருக்கிறது" என்று (மத். 4:17) பிரசங்கிக்கத் தொடங்கி, தம்முடைய ஊழியத்தை ஆரம்பித்து நடத்தினார். பெலஸ்தீனா தேசம் எங்கும் சுற்றித் திரிந்து ராஜ்ஜியத்தின் செய்தியை வல்லமையாய்ப் பிரசங்கித்தார். இதன் மூலம் பரலோக மகிமையைத் துறந்து பூமிக்கு வந்ததின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு எல்லாவகையிலும் தன்னை ஒப்புக் கொடுத்தார். " இழந்து போனதைத் தேடவும், இரட்சிக்கவுமே மனுஷ குமாரன் வந்திருக்கிறார் " (லூக். 19:10) என்று தாம் கூறியபடியே தமது ஊழியத்தை நிறைவேற்றினார். இன்றைக்குப் பெரும்பாலான பிரசங்கிகள் இயேசுவைச் சித்தரிப்பது போல, மனிதனுடைய சரீர பிரச்சினைகளைப் போக்கும்படியாக அவர் வரவில்லையென்பதை நாம் இங்கே நினைவில் கொள்ள வேண்டும்.

இறுதியாக, வேத வாக்கியங்களின்படி காட்டிக் கொடுக்கப்பட்டு, பாடுகள் பட்டு, சிலுவைக்குச் சென்றார். அந்த தியாகத்தின் மூலம் மானிடத்தின் இரட்சிப்புக்காகக் கிடைத்த மாபெரும் பொக்கிஷம் தான் சுவிசேஷம் (ஏசாயா 64:4; 1கொரி. 2:9). மகிமையின் கர்த்தரால் கிடைக்கப் பெற்ற இந்த நற்செய்தியின் பொருள் என்ன என்பதற்கான விளக்கம் 1 கொரி. 15:1-4 வசனங்களில் கொடுக்கப்பட்டுள்ளது. அதாவது, கிறிஸ்துவின் மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல் தான் நற்செய்தி என்று. இயேசுவின் இந்தச் செய்தியைத் தான் அப்போஸ்தலர்கள் உயிர் மூச்சாகக் கொண்டு உலகமெங்கும் சுற்றி அறிவித்தார்கள். ஆனால், இன்றைக்கு " நற்செய்தி கூட்டங்கள் ", " சுவிசேஷக் கூட்டங்கள் " என்ற பெயரில் பெருங் கூட்டங்களைக் கூட்டுகிறவர்கள், கிறிஸ்துவின் பாடு, மரணம், உயிர்த்தெழுதல் பற்றி வாயே திறக்காமல், கூட்டத்தை வெற்றிகரமாக நடத்திவிட்டோம் என்று மார்தட்டிக் கொள்ளுகிறார்கள். இது எப்படி நியாயமாகும்? இந்த இயேசு ஆண்டவர் உயிர்த்தெழுதலுக்குப் பிறகு மகிமையில் பிரவேசித்து, ஏறெடுத்துக் கொள்ளப்பட்டார் (லூக்கா 24:46; 1தீமோ. 3:16) என்று இவ்வசனங்களில் பார்க்கிறோம்.

இப்படி, நித்திய மகிமைக்குச் சொந்தக்காரராகிய இயேசு வானவர், தம்முடைய மகிமையைத் துறந்து, பூமிக்கு வந்து, மகிமையின் ஊழியத்தைச் செய்து, தனது தியாகத்தின் மூலம் நமக்கு நற்செய்தியைக் கொடுத்துள்ளபடியால், நற்செய்தியை மகிமையின் நற்செய்தி என்றழைப்பது எல்லாவகையிலும் நியாய மாகவே உள்ளது.

## III நித்திய மகிமைக்கு அழைத்துச் செல்லும் நற்செய்தி

நற்செய்தியின் மகிமையை அறிந்து கொள்ளும் நம்முடைய முயற்சியின் இன்னுமொரு கட்டமாக நித்திய மகிமைக்கு நம்மை அழைத்துச் செல்லும் நற்செய்தியின் மகிமை பற்றிப் பார்ப்போம்.

நித்திய மகிமையோடிருந்து, அதைத் துறந்து பூமிக்கு வந்து, தமது மகிமையை வெளிப்படுத்தி நற்செய்தியைத் தந்தவர், அந்த மகிமைக்குள் நாமும் பிரவேசிக்க முடியும் என்று சொல்லியுள் ளார்!. நற்செய்தியின் மூலம் கிடைக்கும் ஏராளமான ஆசீர்வாதங் களுக்கு மகுடமாக இது உள்ளது.

இரட்சகராகிய இயேசுவானவர் சிலுவைக்குப் போவதற்கு முன்பாக, தான் சீடர்களை விட்டுப் போகிறேன் என்று சொன்னதி னிமித்தம் கலங்கிப் போயிருந்த சீடர்களிடம், “உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக; தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள்” என்று ஆரம்பித்து, “நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணின பின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும் படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக் கொள்ளுவேன்” (யோவான் 14:3) என்றார். அப்படியானால், அவர் இருக்கும் இடம் எது? அப்போஸ்தலன் பேதுரு, பெந்தெகொஸ்தே நாள் பிரசங்கத்தில், இயேசுவானவர், பிதாவின் வலது கரத்தில் உயர்த்தப்பட்டு இருக்கிறார் (அப். 2:33) என்று அறிவிக்கிறார். அந்த இடம் மகிமையான இடம் என்று வெளிப்படுத்தல் நூலில் இருந்து நாம் புரிந்து கொள்ள முடியும். (வெளி. 21:23).

இந்த மகிமையான இடத்தில் தான், தன்னுடையவர்கள் இருக்க வேண்டுமென்று விரும்புவதாக தன் ஜெபத்தில் மன்றாடு கிறார். “ பிதாவே, உலகத் தோற்றத்துக்கு முன் நீர் என்னில் அன் பாயிருந்தபடியினால் நீர் எனக்குத் தந்த என்னுடைய மகிமையை நீர் எனக்குத் தந்தவர்கள் காணும்படியாக, நான் எங்கே இருக்கி றேனோ அங்கே அவர்களும் என்னுடனே கூட இருக்க விரும்பு கிறேன் ” (யோவான் 17:24) என்றார். இயேசுவின் விருப்பத்தை கவனித்தீர்களா? “ நீர் எனக்குத் தந்தவர்கள் ” என்பது இங்கே யாரைக் குறிக்கிறது? அங்கே அவரோடு இருந்த சீடர்களை மாத்திரம் குறிக்காமல், இன்றளவும் அவரைப் பின்பற்றுகிற, அதாவது, அவருடைய புதிய ஏற்பாட்டு உபதேசத்தை

அப்படியே ஏற்று நடக்கிற யாவரையும் குறிக்கிறது. இதன் மூலம் கிறிஸ்துவின் சுவிசேஷ அழைப்பை ஏற்றுக் கொள்பவர்கள் அனைவரும் அவருடனே இருக்க விரும்புகிறார்.

விரும்புவது மாத்திரமல்ல, அதற்காகத்தான் மீண்டும் அவர் வரவும் போகிறார். தம்முடைய இரண்டாம் வருகை குறித்து இயேசு தாமே சொல்லியிருப்பதைப் பாருங்கள். " மனுஷ குமாரன் தம்மு டைய பிதாவின் மகிமை பொருந்தினவராய்த் தம்முடைய தூத ரோடுங்கூட வருவார் ". (மத். 16:27). இந்த வருகையின் போது சுவிசேஷத்தினால் அழைக்கப்பட்டு அவரால் தெரிந்து கொள்ளப் பட்டவர்களைக் கூட்டிச் சேர்த்து. (மத். 24:31) விசுவாசிகளை மகிமைப்படுத்துவார். இது குறித்துத் தான் பவுலடியார் கொலோசெ பட்டணத்து கிறிஸ்தவர்களுக்கு எழுதும் போது, "நம்முடைய ஜீவனாகிய கிறிஸ்து வெளிப்படும்போது, நீங்களும் அவரோடே கூட மகிமையிலே வெளிப்படுவீர்கள்" (கொலோசெ 3:4) என்று கூறியுள்ளார்.

ஆக, இங்கே நற்செய்தியானது, யாரெல்லாம் அதன் உபதேசத்துக்குக் கீழ்ப்படிகிறார்களோ அவர்கள் ஒவ்வொருவரை யும் கிறிஸ்து அடைந்த மகிமைக்குள் பிரவேசிக்கும் பாக்கியத் தைப் பெற்றுத் தருகிறது. இந்த பாக்கியம் இதை வாசிக்கும் நமக்குச் சொந்தமாக வேண்டுமென்றால், நாம் ஒவ்வொருவரும் கிறிஸ்து வின் புதிய ஏற்பாட்டு உபதேசப்படி விசுவாசித்து (மாற். 16:16), மனந்திரும்பி (அப். 2:38), இயேசுவைத் தேவனுடைய குமாரனென்று அறிக்கையிட்டு (ரோமர் 10:9,10). பாவ மன்னிப்புக்கென்று தண்ணீரில் முழுகி ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ள வேண்டும் (அப். 22:16). அப்பொழுது நாம் கர்த்தரா லே அவருடைய சபையில் சேர்க்கப்படுவோம் (அப். 2:47). நாம் கிறிஸ்துவினுடையவர்களாக மரணபரியந்தம் உண்மையுள்ளவர் களாயிருந்து (வெளி. 2:10). அவருடைய வருகைக்குக் காத்தி ருந்தால் (I கொரி. 1:7) இயேசுவின் விருப்பப்படி மகிமைக்குள் பிரவேசிப்போம். இப்படிப்பட்ட இம்மாபெரும் பாக்கியம் நமக்குச் சுவிசேஷத்தினால் கிடைப்பதால் நற்செய்தியை, மகிமை யின் நற்செய்தி என்பது இன்னும் பொருத்தமானதாக இருக்கிறது.

ஆகையால் அருமையானவர்களே, இந்த மகிமையான நற்செய்திக்கு நம்மில் யாரும் இன்னும் கீழ்ப்படியாதவர்களாயி ருந்தால், இன்றே நற்செய்தியின் உபதேசத்திற்கு ஒப்புக் கொடுப் போம். தேவ சமாதானம் உங்களனைவரோடுங் கூட இருப்பதாக! ஆமென்!!.

**E.Z.S. இராஜநாயகம்**

# ஏன் நாங்கள் இரட்சிக்கப்பட வேண்டும்?

**நா**ம் ஏன் தேவனை, கிறிஸ்துவை, பரிசுத்த ஆவியானவரை, வேதாகமத்தை விசுவாசிக்கிறோம் என்று இதுகாறும் பார்த்தோம். இதற்கு முந்தின பாடத்தில், நாம் ஏன் மோசேயின் பிரமாணத்தின் கீழ் அல்லது பழைய ஏற்பாட்டின் கீழ் இல்லை என்பது பற்றிப் பேசினோம். நியாயப்பிரமாணத்தின் கீழ் இரட்சிப்பு சாத்தியமாயிருந்தால், கிறிஸ்து வருவதற்கு அவசிய மே இருந்திருக்காது. கிறிஸ்து இந்த உலகத்துக்கு வந்ததே நியாயப்பிரமாணத்தினால் மனிதனை இரட்சிக்க முடியாது என்பதற்கு நிரூபணமாயிருக்கிறது. நியாயப்பிரமாணம் அப்போது ஒரு மனிதனை இரட்சிக்க முடியவில்லையானால் இப்போதும் இரட்சிக்க முடியாது.

நாம் இரட்சிக்கப்படுவது ஏன் அவசியம் என்று நாம் பார்த்துக் கொண்டிருப்பது, மனிதன் இழந்த போன நிலையில் இருக்கிறான் என்பதை காட்டுகிறது: இது உண்மை தான். அப்போஸ்தலனாகிய பவுல் ரோமருக்கு எழுதும் போது, “எல்லோரும் பாவஞ்செய்து தேவ மகிமையற்றவர்களாகி ” என்று எழுதுகிறார் (ரோமர் 3:23). மறுபடியும், நாம் இப்படியாக வாசிக்கிறோம், “அந்தப்படியே! நீதிமான் ஒருவனாகிலும் இல்லை” (ரோமர் 3:10) என்று நீதிமான் ஒருவனும் இல்லையென்பதில் சிறுபிள்ளைகளும் உள்ளடக்கமா? இல்லை. ஏனென்றால், ரோமர் 3 ஆம் அதிகாரத்தில் பாவிகள் பொய்யர்களாக, சபிக்கிறவர்களாக, கொலை செய்பவர்களாக, தேவனை எதிர்ப்பவர்களாக அடையாளப்படுத்தப்படுகிறார்கள். அதே சமயம் நன்மை, தீமை அறியாத சிறுபிள்ளைகள் வேத வசனங்களில் சுத்தமானவர்களாகவும், ஒன்றும் அறியாதவர்களாகவும் சொல்லப்பட்டிருக்கிறார்கள். இயேசு தம்முடைய நாட்களில் வாழ்ந்த ஜனங்களைப் பார்த்து, நீங்கள் சிறு பிள்ளைகளைப் போல மாறாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க முடியாது என்று போதித்தார் (மத்தேயு 18:1-6). இயேசுவின் நாட்களில் இருந்த பாவிகள் சிறுகுழந்தைகள் போன்ற அறியாமை நிலைக்கு அப்பாற்பட்டவர்கள். எது சரி, எது தவறு என அறியும் பருவத்தை அடைந்தவர்கள். அவர்கள் தங்கள் செயல்களுக்கு பொறுப்பாளிகள். ஆகவே தான், பாவிகள், அநீதிமான்களென்றும், தேவ மகிமையற்றவர்களென்றும், தேவ பக்தியற்றவர்களென்றும் சொல்லப்பட்டிருக்கிறார்கள். பாவிகளைப் பற்றி மேலும் விவரிக்க யோவான் இப்படிச் சொல்கிறார். “பாவஞ் செய்கிற எவனும் நியாயப்பிரமாணத்தை மீறுகிறான்; நியாயப்பிரமாணத்தை

மீறுகிறதே பாவம்" (I யோவான் 3:4) என்று. இங்கே, நாம் ஆரம்பத்திற்கு திரும்பிப்போய் மனிதன் ஏன் பாவியானான் என்று பார்ப்போம்.

தேவன் ஆணையும், பெண்ணையும் உண்டாக்கி ஏதேன் தோட்டத்தில் வைத்தபோது அவர்கள் பாவமில்லாமல் தான் இருந்தார்கள். அவர்களுடைய வேலை தோட்டத்தைச் சுத்தப் படுத்துவதும், பாதுகாப்பதும் தான், தேவன் அவர்களைப் பார்த்து, " நீங்கள் தோட்டத்திலுள்ள சகல விருட்சத்தின் கனியையும் புசிக்கவே புசிக்கலாம். ஆனாலும், நன்மை, தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்க வேண்டாம். அதைப் புசிக்கும் நாளில் நீங்கள் சாகவே சாவீர்கள்" என்று சொன்னார். நாம் இப்போது ஆதியாகமம் மூன்றாம் அதிகாரத்திற்கு போய் அங்கே என்ன நடந்தது என்று கவனிப்போம். "தேவனாகிய கர்த்தர் உண்டாக்கின சகல காட்டு ஜீவன்களைப் பார்க்கிலும் சர்ப்ப மானது தந்திரமுள்ளதாயிருந்தது. அது ஸ்திரீயை நோக்கி: நீங்கள் தோட்டத்திலுள்ள சகல விருட்சங்களின் கனியையும் புசிக்க வேண்டாம் என்று தேவன் சொன்னது உண்டோ என்றது. ஸ்திரீ சர்ப்பத்தைப் பார்த்து; நாங்கள் தோட்டத்திலுள்ள விருட்சங் களின் கனிகளைப் புசிக்கலாம். ஆனாலும், தோட்டத்தின் நடுவில் இருக்கிற விருட்சத்தின் கனியைக் குறித்து, தேவன், நீங்கள் சாகாதபடிக்கு அதைப் புசிக்கவும், அதைத் தொடவும் வேண்டாம் என்று சொன்னார் என்றான். அப்பொழுது சர்ப்பம் ஸ்திரீயை நோக்கி: நீங்கள் சாகவே சாவதில்லை; நீங்கள் இதைப் புசிக்கும் நாளிலே உங்கள் கண்கள் திறக்கப்படும் என்றும், நீங்கள் நன்மை, தீமை அறிந்து தேவர்களைப் போல் இருப்பீர்கள் என்றும் தேவன் அறிவார் என்றது. அப்பொழுது ஸ்திரீயானவள், அந்த விருட்சம் புசிப்புக்கு நல்லதும், பார்வைக்கு இன்பமும், புத்தியைத் தெளி விக்கிறதற்கு இச்சிக்கப்படத்தக்க விருட்சமுமாயிருக்கிறது என்று கண்டு, அதன் கனியைப் பறித்துப் புசித்து, தன் புருஷனுக்கும் கொடுத்தாள்; அவனும் புசித்தான். அப்பொழுது அவர்கள் இருவருடைய கண்களும் திறக்கப்பட்டது; அவர்கள் தாங்கள் நிர்வாணிகள் என்று அறிந்து, அத்தி இலைகளைத் தைத்து தங்க ளுக்கு அரைக் கச்சைகளை உண்டு பண்ணினார்கள்" (ஆதியா கமம் 3:1-7). தேவன் பிறகு அவர்களை சந்தித்த போது, அவர் கள் சாக்குபோக்கு சொன்னதாகவும் வேதவசனம் கூறுகிறது. ஆதாம் ஏவாளை குற்றஞ்சாட்டினான், ஏவாள் சர்ப்பத்தை குற்றஞ் சாட்டினாள். அதன் பின்பு தேவன் அவர்களுடைய கீழ்ப்படியா மைக்கு, நிச்சயமாகவே அதற்கான விளைவுகளைச் சந்திக்க வேண்டும் என்பதை வெளிப்படுத்தினார். இந்தத் தண்டனை சாத்தான் அல்லது சர்ப்பத்துக்கும் பொருந்தும். தடை செய்யப் பட்ட கனியைப் புசிக்கும் நாளிலே சாகவே சாவீர்கள் என்று அவர் களுக்கு சொல்லப்பட்டது, அப்படியே அவர்கள் ஆவிக்குரிய மரணத்தை சந்தித்தார்கள். அதாவது, அவர்களுக்கும், தேவனுக்கும்

இடையில் பாவம் வந்தது. இதன் மூலம் அவர்களுக்கும் தேவனுக்கும் இடையே பிரிவு ஏற்பட்டது, அவர்கள் தேவனுக்கு சத்துருக்களாக மாறி விட்டார்கள்.

தேவன் பாவமில்லாதவர், தேவன் பூரணமானவர், தேவன் பரிசுத்தமானவர் என்று வேதாகமம் நமக்குப் போதிக்கிறது. தேவன் பொய்யுரையாதவர் என்றும், அவர் ஒருவனையும் சோதிக்கிறவருமல்ல என்றும் கூறுகிறது. (எபிரெயர் 6:18; யாக்கோபு 1:13). தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்துவும் “பாவமில்லாதவர்” என்று சொல்லப்பட்டிருக்கிறது (I பேதுரு 2:22). தேவன் பூரணராயிருந்ததினாலும், அவர் பாவத்தை வெறுத்ததினாலும், பாவியாகிவிட்ட மனிதன், தொடர்ந்து தன்னுடைய பாவத்தில் இருந்து கொண்டு தேவனை அணுகுவ தென்பது இயலாததாயிருந்தது. பழைய ஏற்பாட்டு தேவனுடைய தீர்க்க தரிசி இப்படியாகச் சொன்னார். “இதோ, இரட்சிக்கக்கூடாத படிக்கு கர்த்தருடைய கை குறுகிப் போகவுமில்லை; கேட்கக் கூடாதபடிக்கு அவருடைய செவி மந்தமாகவுமில்லை. உங்கள் அக்கிரமங்களே உங்களுக்கும், உங்கள் தேவனுக்கும் நடுவாகப் பிரிவினையை உண்டாக்குகிறது; உங்கள் பாவங்களே அவர் உங்களுக்குச் செவி கொடாதபடிக்கு அவருடைய முகத்தை உங்களுக்கு மறைக்கிறது என்று. (ஏசாயா 59:12). “கர்த்தருடைய கண்கள் நீதிமான்கள் மேல் நோக்கமாயிருக்கிறது, அவருடைய செவிகள் அவர்கள் வேண்டுதலுக்குக் கவனமாயிருக்கிறது; தீமை செய்கிறவர்களுக்கோ கர்த்தருடைய முகம் விரோதமாயிருக் கிறது” (Iபேதுரு 3:12)

பழைய ஏற்பாட்டுக் காலம் முழுவதும், தேவன், பாவமுள்ள மனிதன் தன்னுடைய பாவத்தை நிவர்த்தி செய்வதற்கு மிருகபலி செலுத்த வேண்டும் என்று கட்டளையிட்டிருந்தார். அப்படி இருந்த போதிலும் மனிதனுடைய பாவங்கள் வருடந் தோறும் நினைவு கூரப்பட்டபடியால் பலிகள் தொடர்ந்து செலுத் தப்பட வேண்டியதாயிருந்தது. காளை, வெள்ளாட்டுக்கடா இவைகளுடைய இரத்தம் பாவங்களை நிவர்த்தி செய்ய முடியவில்லை (எபிரெயர் 10:1-4). கடைசியாக, தேவன் மனித இனத்தின் பாவங்களுக்காக ஒரே தரம் பலியாக தம்முடைய சொந்தக் குமாரனையே இந்த உலகத்திற்கு அனுப்பிக் கொடுத்தார் (எபிரெயர் 10:5-10). “இதற்காக நீங்கள் அழைக்கப்பட்டும் இருக்கிறீர்கள்; ஏனெனில், கிறிஸ்துவும் உங்களுக்காகப் பாடுபட்டு, நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்து வரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின் வைத்துப் போனார். அவர் பாவஞ்செய்யவில்லை, அவருடைய வாயிலே வஞ்சனை காணப்படவுமில்லை, அவர் வையப்படும்போது பதில் வையாமலும், பாடுபடும் போது பயமுறுத்தாமலும், நியாயமாய்த் தீர்ப்பு செய்கிறவருக்குத் தம்மை ஒப்புவித்தார். நாம் பாவங்களுக்குச் செத்து, நீதிக்குப் பிழைத்திருக்கும்படிக்கு, அவர் தாமே தமது

சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின் மேல் சுமந்தார்; அவருடைய தழும்புகளால் குணமானீர்கள்" என்று பேதுரு சொன்னார் (I பேதுரு 2:21-24). எனவே, மனிதன் இழந்து போன நிலையில் இருந்தான். அவன் பாவத்தில் இருந்தான், தேவ பக்தியற்றவனாக, அநீதிமானாகக் காணப்பட்டான். மனிதன் தன் சுயநீதியினாலோ, நற்கிரியைகளைச் செய்வதினாலோ இரட்சிக்கப்பட முடியாமல் இருந்தது. நியாயப்பிரமாணத்தினாலும் அவன் இரட்சிப்பைப் பெற முடியாமலிருந்தது.

இது பற்றி பவுல் இப்படியாகச் சொல்கிறார். "நாம் செய்த நீதியின் கிரியைகளினிமித்தம் அவர் நம்மை இரட்சியாமல், தமது இரக்கத்தின்படியே மறுஜென்ம முழுக்கினாலும், பரிசுத்த ஆவியினுடைய புதிதாக்குதலினாலும் நம்மை இரட்சித்தார்" (தீத்து. 3:5). மறுபடியும் பவுல் சொல்லும் போது, "கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள், இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு; ஒருவரும் பெருமை பாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல". ஆகையால், கிறிஸ்து ஒரு பூரண மனிதனாக, பூரண பலியாக சிலுவையில் மரித்த போது அவர் மனிதனுடைய இரட்சகராக, நம்பிக்கையாகி விட்டார். ஆகையால் தான் நாம் இப்படி வாசிக்கிறோம், "தேவன், தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்; உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்படி தேவன் தம்முடைய குமாரனை உலகத்தில் அனுப்பாமல், அவராலே உலகம் இரட்சிக்கப்படுவதற்காகவே அவரை அனுப்பினார்" என்று (யோவான் 3:16, 17).

கிறிஸ்து மரித்ததினால் அவருடைய இரத்தம் சிந்தப்பட்டது. அவருடைய இரத்தத்தைக் கொண்டு நம்முடைய பாவங்கள் கழுவப்பட்டிருக்கிறது என்று நாம் வாசிக்கிறோம். பவுல் இப்படியாகச் சொன்னார். "அவருடைய கிருபையின் ஐசுவரியத்தின்படியே இவருடைய இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் நமக்கு உண்டாயிருக்கிறது" (எபே. 1:7). "கிறிஸ்து தாமே இது பாவமன்னிப்புண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது என்று சொன்னார்" (மத்தேயு 26:28). ஆனால், ஒருவருடைய பாவங்கள் இப்படியாக மன்னிக்கப்பட கிறிஸ்து, வைத்திருக்கிற நிபந்தனைகளை ஏற்றுக்கொள்ள வேண்டும். கிறிஸ்து நாம் அவரை தேவனுடைய குமாரன் என்று விசுவாசிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார் (யோவான் 14:1, அப். 8:37). நம்முடைய பாவங்களிலிருந்து நாம் மனந்திரும்ப வேண்டும் என்று அவர் கட்டளையிட்டிருக்கிறார் (லூக்கா. 13:3). அவரை நாம் மனிதருக்கு முன்பாக அறிக்கை செய்வது அவசியம் என்றும் சொல்லியிருக்கிறார் (மத்தேயு 10:32). கடைசியாக, அவர்

ஞானஸ்நானத்தையும் கட்டளையிட்டுள்ளார். பேதுரு, தன்னிடம், இரட்சிக்கப்பட நாங்கள் என்ன செய்ய வேண்டும்? என்று கேட்ட மக்களைப் பார்த்து, " நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள் " என்று சொன்னார் (அப். 2:38).

ஒருவர் கர்த்தருக்குக் கீழ்ப்படியும் போதுதான் அவருடைய பாவங்கள் மன்னிக்கப்படுகிறது. அப்பொழுதுதான் ஒருவர் தேவனுடைய குடும்பத்தில் ஒரு பிள்ளையாக, அவருடைய சமூகத்தில் ஒரு சிநேகிதராகப் பிரவேசிப்பதை சாத்தியப்படுத்து கிறது. ஒருவர் தொடர்ந்து உண்மையுள்ளவராக இருக்கும் போது இயேசு கிறிஸ்துவின் இரத்தம் தொடர்ந்து அவருடைய பாவங் களைக் கழுவுகிறது (I யோவான் 1:7) இதை வேறுவிதமாகச் சொன்னால், மனிதன் ஒரு பாவியாக இருந்தாலும் கிறிஸ்துவின் இரத்தத்தினால் அவனுடைய பாவங்கள் தேவனுடைய முகத்தி லிருந்து மறைக்கப் படுகிறது. அதாவது, தேவனுடைய சித்தத்தின் படி நடக்க அவன் முழுமையாக முயற்சி எடுத்துக் கொண்டிருக் கும் வரை மேற்சொல்லப்பட்ட காரியம் சாத்தியமாகிறது. இதற்கு மாறாக, மனிதன் தெரிந்தோ அல்லது வேண்டுமென்றோ பாவம் செய்து தேவனை எதிர்க்கும் போது தேவனுக்கும், மனிதனுக்கும் இடையே பாவம் மீண்டுமாக வந்து விடுகிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் தேவனிடத்தில் திரும்புவதற்கான ஒரே வழி பாவங்களிலிருந்து மனந்திரும்பி, தவறுகளை அறிக்கையிட்டு கர்த்தரிடத்தில் மன்னிப்புக் கேட்பது தான் (யாக்கோபு. 5:16).

கிறிஸ்து மனிதனுக்காக மரித்தபோது, அவர் மனிதனுடைய மத்தியஸ்தராக, ஒப்புரவாக்குபவராக, பரிந்து பேசுகிறவராக, பிரதான ஆசாரியாராக மாறினதோடு தேவனிடத்தில் அவனைத் திரும்ப சேர்ப்பவராகவும், பிதாவுக்கு முன்பாக மனிதனுடைய பிரதி நிதியாகவும் ஆனார். (I தீமோத்தேயு 2:5; எபேசியர் 2:16; யோவான் 2:1, எபிரெயர் 8:1; எபிரெயர் 10:21).

என் நண்பர்களே, நாம் பாவிகள், நம்முடைய ஆத்துமா வை இழந்தவர்கள். நம்மை நாம் இரட்சிக்க முடியாது. அதுபோல எந்த ஓர் மனிதனோ அல்லது மனிதனால் உண்டாக்கப்பட சட்ட மோ அல்லது எந்த ஒரு அமைப்போ நம்மை இரட்சிக்கவோ முடியாது. லஞ்சம் கொடுத்து நாம் பரலோகம் செல்லவும் முடியாது. ஆகையால், நாம் கர்த்தருடைய இரக்கத்தில் இருக்கி றோம். அவரோடு நாம் பேரம் பேசும் நிலையில் கூட இல்லை. எனவே, எவ்வித நிபந்தனையுமின்றி அவரிடம் நம்மைத் தாழ்த்தி அவருடைய இரக்கத்திற்காக மன்றாட வேண்டும். ஆனால், கவனியுங்கள்; நமக்கு ஓர் நற்செய்தி இருக்கிறது. நாம் இரட்சிக்கப்படும்படிக்கும், தேவனோடு ஒப்புரவாகும்படிக்கும், ஒரு நாள் பரலோகம் சென்று தேவனோடு என்றென்றும் வாழும் படிக்கும் கிறிஸ்து நமக்காக மரித்தார். ஆனால், அதற்கு நாம்

முன்பே குறிப்பிட்டபடி சில நிபந்தனைகள் இருக்கின்றன. நாம் கர்த்தரை எந்த அளவுக்கு விசுவாசிக்கிறோம் என்பதை அவர் பார்க்க விரும்புகிறார். அத்தோடு நாம் இரட்சிக்கப்பட எந்த அளவுக்கு செயல்பட விரும்புகிறோம் என்பதையும் அவர் பார்க்க விரும்புகிறார். நாம் நம் இரட்சிப்பை சம்பாதிப்பதற்கு சாத்தியமே இல்லை. கர்த்தர் நமக்கு செய்யப் போகிற எல்லாவற்றிற்காகவும் நாம் கிரயத்தை செலுத்துவதென்பது முடியாத காரியம். ஆனால், நாம் அவரில் விசுவாசம் வைத்து, அவரைப் பின்பற்றும்படி பாவங்களிலிருந்து திரும்பி, அவரை தேவனுடைய குமாரன் என்று அறிக்கையிட்டு, இயேசுவின் இரத்தத்தோடு தொடர்பை ஏற்படுத்திக் கொள்ளவும், நம் பாவங்கள் கழுவப்படவும் ஞானஸ்நானம் பெறவேண்டும் (மாற்கு 16:16; அப்போஸ்தலர். 2:38; மத்தேயு 10:32; ரோமர்6) இவைகளைச் செய்யும் போது, கர்த்தர் நம்மை மன்னித்து, இரட்சித்து, நம்முடைய எல்லா பாவங்களிலிருந்தும் நம்மைக் கழுவி, தம்முடைய சபையிலே நம்மை சேர்த்துக்கொள்வார். அங்கே நாம் அவரை சேவித்து, மரண பரியந்தம் அவருக்கு உண்மையாயிருக்கும் போது, ஒரு நாள் நாம் பரலோகம் சென்று அங்கே அவரோடு என்றென்றுமாய் வாழ முடியும்.

**J.C. சோட்**

## நாலும், நடப்பும்

1. எந்த ஒரு பிரச்சனைக்கும் வன்முறை தீர்வாகாது – சோனியா
2. அமெரிக்கா அதிபர் ஒபாமாவின் இந்திய வருகை இரு நாடுகளுக்கும் பயனளித்துள்ளது.
3. தண்ணீர்த் தொட்டியில் தவறி விழுந்த குட்டியைக் காப்பாற்ற யானைகள் விடிய விடியப் போராடின. ஆனால், மனிதன் குழந்தைகளைத் தண்ணீரில் தள்ளுகிறான்.
4. மகாராஷ்டிரா மாநிலத்துக்குப் புதிய முதல்வராக பிரித்விராஜ் சவான் பதவியேற்பு.
5. பிகார் மாநில சட்டசபைத் தேர்தல் அமைதியாக நடந்து முடிந்துள்ளது.
6. குடிசைவாசிகளிடம் சங்கமிப்பது ராகுல் காந்திக்கு வழக்கமாகி வருகிறது.
7. 16–வது ஆசிய விளையாட்டுப் போட்டி சீனாவில் கோலாகாலமாகத் துவங்கியது.

பெண்கள் பகுதி

# நம் குடும்பத்தில் இயேசு

நமது இரட்சகராகிய இயேசு கிறிஸ்து இந்த உலகத்தில் வாழ்ந்தபோது சில குடும்பங்களுக்கு விருந்தாளியாகச் சென்றார்.

1. சீமோன் பேதுரு, அந்திரேயா வீடு (மாற்கு. 1:29-31)
2. யவீருவின் வீடு (மாற்கு. 5:22-41)
3. பெத்தானியாவின் மார்த்தாள், மரியாள் வீடு (லூக்கா. 10:38-43)
4. சகேயுவின் வீடு (லூக்கா. 19:1-10).

மேற்கண்ட நான் குடும்பங்களும் மாற்குவில் இருந்து இரண்டும், லூக்காவிலிருந்து இரண்டுமாக பல நல்ல கருத்துக்களால் பின்னிப் பிணைந்து உள்ளது. இந்த நான்கு குடும்பங்களில் இரண்டு குடும்பங்கள் பாலஸ்தீனாவின் வடக்கில் உள்ள கலிலேயாவிலும், மற்ற இரண்டும், தெற்கு முனையில் உள்ள யூதேயாவிலும் அமைந்திருந்தது. ஒவ்வொரு குடும்பத்திலும் இவர் வரவழைக்கப்பட்டார். கலிலேயாவின் வடமேற்கு எல்லையில் கரையோரத்தில் அமைந்திருந்த தங்கள் ஏழ்மையான வீட்டிற்கு, தங்கள் அன்பான எஜமானின் வருகையை எண்ணி சீமோன் பேருதுவும், அந்திரேயாவும் மகிழ்ச்சியில் திளைத்துப் போயிருந்தனர். மரிக்கும் தருவாயில் இருக்கும் தன் மகளை குணமாக்கும்படி யவீரு இயேசுவை வருந்திக் கேட்டுக்கொண்டான். பெத்தானியாவில் உள்ள மார்த்தாள், மரியாள் வீட்டில் இயேசுவுக்கு எப்போதுமே மனமார்ந்த வரவேற்பு கிடைத்தது. ஆயக்காரருக்குத் தலைவனாயிருந்தவன் வீட்டிற்குத் தானாக சென்று தங்க வேண்டும் என்று இயேசு எண்ணினார்.

இயேசு கிறிஸ்துவுக்கு சகேயுவிடமிருந்து பெரிதாக ஒன்றும் உயர்ந்த வரவேற்பு கிடைத்தது என்று நாம் கூறிவிட முடியாது. இயேசு தாமாக இந்த வீடுகளுக்கு அழையா விருந்தாளியாகச் செல்லவில்லை. அழைத்தவர்களும் உள்ளே வெறுப்பை வைத்துக் கொண்டு வெளியே உபசரிப்பது போன்ற ஒரு மாயத் தோற்றத்துடன் அவரை உபசரிக்கவில்லை. தங்களுடைய ஏழ்மையான வீடுகளில், தேவ குமாரனை தெய்வீக விருந்தாளியாக ஏற்றுக்கொண்ட விஷயத்தில், எண்ணத்திலும், செயலிலும் தங்கள் மகிழ்ச்சியைக் காட்டினார்கள். தம்மை விரும்பாத, வரவேற்காத வீடுகளுக்குச் சென்று இயேசுக் கிறிஸ்து நீண்ட நேரம் தங்கினதே இல்லை. லூக்கா 4ம் அதிகாரத்தின்படி அவர் நாசரேத்திலிருந்து வெளியேறினது. மாற்கு 5ம் அதிகாரத்தில் உலக ஆசை பிடித்த கதரேனரிடமிருந்து வெளியே வந்தது ஆகிய இரண்டும் இதற்கு தக்க சான்றுகள் ஆகும். வெளிப்படுத்தல்

3;14-22 ஆகிய வசனப்பகுதிகளில் பார்த்தால், இயேசு கிறிஸ்து தன்னுடைய சொந்த சபையிலே உள்ளவர் கூட குளிருமின்றி, அனலுமின்றி வெதுவெதுப்பாயிருக்கிறபடியால் அவர்களை வாந்தி பண்ணிப் போடுவேன் என்கிறார். முடிவாக, இங்கே நாம் கவனிக்க வேண்டியது, இயேசுவை நாம் அழைத்தாலே யொழிய அவர் வந்து நம் வீட்டில் வாசம் பண்ணமாட்டார்.

மேலே கண்ட வீடுகளில் உண்மையாகவே தேவைகள் இருந்தது. பேதுரு, அந்திரேயா வீட்டில் பயங்கரமான சுகவீனம் இருந்தது. மாற்கு ஆசிரியர் சொல்லும் போது, பேதுருவின் மாமி ஜுரமாயிருந்தாள் (மாற்கு. 1:30) என்கிறார். லூக்கா ஆசிரியர் ஒரு வைத்தியனாக இருந்து கொண்டு அதை “ கடும் ஜுரம் ” (லூக்கா 4:38) என்கிறார். அதே வசனத்தில் “ அவளுக்காக அவரை வேண்டிக் கொண்டார்கள் ” என்று வாசிக்கிறோம். இந்த மாதிரி கரிசனை அவர்களுக்கிடையே இருந்த அன்பு, பாசப்பிணைப்பு, இரக்கம், ஈவு இவைகளை வெளிப்படுத்துகிறது. இதைத்தான் இன்று நாமும் எதிர்பார்க்கிறோம். இயேசுவை தங்கள் வீட்டிற்கு அழைக்கும் குடும்பங்கள் பொதுவாகவே பல தகுதியான குணங் களை பெற்றிருக்கும். இரண்டாவது வீடான யவீருவின் வீட்டில், சுகவீனம் மரணத்தை ஏற்படுத்தியது. உண்மையாகவே யவீரு வின் வீட்டில் ஒரு தேவை இருந்தது. அதைப் போலவே, ஜீவனுள்ள வார்த்தைகள் பேசப்பட்டு, நிரூபிக்கப்பட வேண்டிய அவசியம் பெத்தானியாவின் குடும்பத்தில் இருந்தது. தேவ சித்தத்தை நிறைவேறினதேயல்லாமல் வேறு வேலையை அவர் செய்யவில்லை. மத். 7:37-ல் “ எல்லாவற்றையும் நன்றாய்ச் செய் தார்” என்று அவர் புகழப்படுகிறார். ஆச்சரியப்படப்படுகிறார். எல்லாத் தேவைகளைக் காட்டிலும் சகேயுவின் வீட்டில் இரட்சிப் பின் தேவை இருந்தது. அநியாயமாய் வாங்கினதை திரும்பச் செலுத்தினான். இங்கே நான்கு வீடுகள், ஒவ்வொன்றும் ஒரு குறிப்பிட்ட தேவையில் இருந்தது.

இயேசு கிறிஸ்து ஆசீர்வாதத்தை சுமந்து கொண்டு நம்முடைய வீடுகளுக்கு வர இருக்கிறார். தெய்வீக விருந்தாளி யான அவர் வெறுங்கையோடு வருவதில்லை. இந்த உலகமே கொள்ளாத அளவு ஐசுவரிய களஞ்சியம் அவருக்கே சொந்த மானது. ஒவ்வொரு வீட்டிற்கும் அவர் ஓர் ஆசீர்வாதமாக மட்டும் வரவில்லை. யார் யாருக்கும் எந்த ஆசீர்வாதம் மிகத் தேவையோ அதைக் கொண்டு வருகிறார். சீமோன் வீட்டிற்கு அவர் மா மருத்துவராக, வந்தார். அவருடைய வருகையால் அக்குடும்பத்தில் அதிகம் நேசிக்கப்பட்ட அம்மாளுடைய சுகவீனம் நீங்கினதோடல்லாமல், மற்றவர்களும் ஆறுதல் அடைந்தார்கள். யவீருவின் வீட்டிற்கு உயிர்த்தெழுதலையும், ஜீவனையும் கொடுக்கிறவராக வந்தார். தன் ஒரே மகள் மரித்துப் போன போது, இயேசுவானவர் அவளோடிருந்தது எவ்வளவு பாக்கியமான நிலையென்று பாருங்கள். நீங்களும், நானும் பல முறை இம்மாதிரி சம்பவங்களில் என்ன செய்வது, சொல்வது

என்று அறியாமல் இருக்கிறோம். ஆனால் மனிதனை சிருஷ்டித்த அவர் நம்முடைய தேவைகளை சரியாகத் தெரிந்து வைத்திருக் கிறார். இரண்டு வார்த்தைகளை அவர் உதிர்க்கிறார். “பயப்படாதே, விசுவாசமுள்ளவனாயிரு” (மாற்கு. 5:36). மனிதர்கள், கதை கதையாக வார்த்தைகளால் பேசலாம். ஆனால், இயேசு கிறிஸ்து இரண்டே வார்த்தைகளில் ஆறுதல் படுத்துகிறார்.

மரியாளின் வீட்டில் இருந்து தம்முடைய அற்புதமான ஜீவனுள்ள வசனங்களை போதித்துக் கொண்டிருந்தார். அதனு டைய மதிப்பு அவளுக்குத் தெரிந்திருந்தது. ஞானி சாலமோன் கூறும்போது, “ஏற்ற சமயத்தில் சொல்லப்பட்ட வார்த்தை வெள்ளித் தட்டில் வைத்த பொற்பழங்களுக்குச் சமானம்” (நீதி. 25:1) என்கி றார். ஏவராவது ஒருவர் ஏற்ற வார்த்தைகளைப் பேசியிருப்பாரா னால், அது தேவனுடைய குமாரனாகத்தான் இருக்க முடியும். ஏக்கத்தோடு இருந்த மரியாளின் இருதயத்திற்கேற்ற வார்த்தை களை இயேசு மொழிந்தருளினார். முதலாம் நூற்றாண்டிலே எப்படி சகேயுவின் வீட்டிற்கு இரட்சிப்பைக் கொடுத்த இரட்ச கராயிருந்தாரோ, அதே இரட்சகர் தான் இன்றும் நம் வீட்டிற்கு இரட்சிப்பைக் கொடுக்க முடியும்.

இயேசு இந்த நான்கு வீட்டை விட்டுப் போகும்போது, அவர் கள் முன்னிலையைக் காட்டிலும் முன்னேற்றம் காணப்பட்டது. சுகம், ஜீவன், வார்த்தை, இரட்சிப்பு நான்கும் கிடைத்தது. நான்கு வீடுகள், நான்கு சந்திப்புகள், நான்கு ஆசீர்வாதங்கள்.

இன்றைக்கும் நாம் இயேசுவை நம் வீட்டிற்கு அழைத்து அவர் கூறிய வார்த்தைகளின்படி செய்வோமானால், அவரும், அவருடைய வார்த்தைகளும் நம்மை உயர்த்தும். வார்த்தைகள் என்றும் சொல்லும்போது கடைசி நாளில் நம்மை நியாயந் தீர்க்கப்போகிறதான வசனம் என்னும் வார்த்தைகளை கேட்டு, விசுவாசித்து, மனந்திரும்பி, இயேசுவை தேவனுடைய குமார னென்று அறிக்கையிட்டு, பாவம் போக ஞானஸ்நானத்தின் மூலம் கழுவப்படுவோமானால் நாம் இரட்சிக்கப்பட்டு இயேசு நம்மை அவருடைய சபையில் சேர்ப்பார். ஒருவேளை நாம் அவருடைய சபையில் அங்கமாக இருப்போமானால் என்னென்ன காரியங்கள் செய்யப்பட வேண்டும் என்று வசனம் சொல்லுகிறதோ அதை செய்வோம். அப்போதுதான் நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்ள முடியும்.

உண்மையாகவே, நம் குடும்பம் இரட்சிக்கப்பட வேண்டும். மகிழ்ச்சியாக இருக்க வேண்டும். கணவனுடைய குணத்தினா லும், மனைவியினுடைய பரிசுத்தத்தினாலும் நன்மையான காரியங்கள் குடும்பத்தில் கிடைக்க வேண்டும். இவை எப்படி கிடைக்குமென்றால் நம் குடும்பத்தில் இயேசு இருக்க வேண்டும். நாம் ஆயத்தமா? ஆமென்.

**ரேச்சல் இராஜநாயகம்**

வாலிபர் பகுதி

# ஊழியத்திற்கேற்ற உத்தம குணங்கள்

அருமையான வாலிப உள்ளங்களே! உங்கள் யாவரையும் நசரேயனாகிய இயேசுவின் நாமத்தில் வாழ்த்துகிறேன். புதிய ஏற்பாட்டில் ஒரு கிறிஸ்தவனுக்கும், கிறிஸ்துவுக்கும் உள்ள உறவானது ஒரு எஜமானுக்கும், அடிமைக்கும் உள்ள உறவாக, உருவகமாக விவரிக்கப்பட்டிருக்கிறது. பவுல் பெரும்பாலும் தன்னை கிறிஸ்துவின் ஊழியக்காரன் அல்லது அடிமையென்று காட்டுகிறார் (ரோமர் 1:1; கலாத்தியர் 1:10). வாலிபர்களாகிய நாம் சிலர் முழுநேர ஊழியம் செய்கிறோம். இன்னும் சிலர் உலகப்பிரகாரமான வேலை செய்து கொண்டு ஊழியம் செய்கிறோம். இன்னும் ஒரு சிலர் கிறிஸ்துவின் சபையில் விசுவாசிகளாயிருக்கிறோம். எப்படியாயினும் வாலிபர்களாகிய நாம் தேவனுடைய ஊழியக்காரர்களாக இருக்கிறோம். "உலகமெங்கும் போய் சர்வசிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்" என்று இயேசு தம்முடைய சீஷர்களுக்கு மாத்திரம் கட்டளை கொடுக்கவில்லை, அந்த கட்டளை எல்லா கிறிஸ்தவர்களுக்கும் பொருந்தும், அதிலும் குறிப்பாக இந்த காரியத்தில் வாலிபர்களின் பங்கு அதிகமாக இருக்கிறது. இப்படி நாம் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, ஆத்துமாக்களை ஆதாயம் செய்யாவிட்டால் நாம் வெறுங்கையோடு கர்த்தரை சந்திக்க வேண்டியதாயிருக்கும். இந்த உலகத்தில் எத்தனையோ வாலிபர்கள் தவறான பழக்கவழக்கங்களினால் அழிந்து போய்க் கொண்டிருக்கிறார்கள், அவர்கள் ஆத்துமாவில் மரித்துப் போய்க் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களைப் பற்றி நாம் ஆத்தும பாரம் உடையவர்களாயிருக்க வேண்டும். அவர்களை நாம் தேவனிடத்தில் திருப்பும் போது தேவன் அதில் பிரியமாயிருப்பார். நாம் நம் எஜமானாகிய கிறிஸ்துவின் அடிமைகளாயிருக்கிறோம். பழங்காலத்தில் அடிமைகள் தங்கள் எஜமான்களுடைய பெயரால் குறிக்கப்பட்டார்கள். அவர்கள் எந்த எஜமானுடையவர்கள் என்பதை அடையாளம் காட்டுவதற்காக அப்படி முத்திரையிடப்படுவார்கள்.

ஆனால், நாம் கிறிஸ்துவுக்கு அடிமைகளாயிருப்பது வற்புறுத்தலினாலோ அல்லது கட்டாயத்தினாலோ அல்ல, நாம் மனப்பூர்வமாய் இயேசுவை நம்முடைய எஜமானாக ஏற்றுக் கொள்வதாகும். அப்போஸ்தலனாகிய பவுல் ரோமக் கிறிஸ்தவர்களுக்குச் சொல்லும் போது " மரணத்துக்கேதுவான பாவத்துக்கானாலும், நீதிக்கேதுவான கீழ்ப்படிதலுக்கானாலும் எதற்குக்

கீழ்ப்படியும்படி உங்களை அடிமைகளாக ஒப்புக் கொடுக்கிறீர்களோ, அதற்கே கீழ்ப்படிகிற அடிமைகளாயிருக்கிறீர்களென்று அறியீர்களா?" என்று கேட்கிறார் (ரோமர் 6:16). இயேசு ஒரு போதும் தம்மைப் பின்பற்ற வேண்டும் என்று யாரையும் வற்புறுத்துவதில்லை. அதைப்பற்றி இயேசு சொல்லும் போது "ஒருவன் என்னைப் பின்பற்றி வரவிரும்பினால், அதன் தன்னைத் தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னை பின் பற்றக்கடவன் " என்றே சொன்னார் (மத்தேயு 16:24). மேலும், இயேசு யோவான் 8:34ல் சொல்லும்போது, " பாவஞ் செய்கிறவன் எவனும் பாவத்துக்கு அடிமையாயிருக்கிறான் " என்று மெய்யாகவே, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார் வாலிபர்களாகிய நாம் தேவனுக்கு அடிமைகளாயிருப்பதால் நல்ல அடிமைகளாக எப்படி இருப்பது என்பதை கற்றுக் கொள்ள வேண்டும். ஏனென்றால், நல்ல வேலையாட்களே பலனளிக்கப் படுவார்கள். சரி, புதிய ஏற்பாடு நல்ல வேலையாட்களாக எப்படி இருப்பது என்பது பற்றி என்ன கூறுகிறது? கீழ்காணும் குணாதிசயங்களை ஒரு வேலைக்காரன் பெற்றிருந்தால் நல்ல வேலைக்காரனாக அவனால் திகழ முடியும்.

## I கீழ்ப்படிதல்

இதுதான் ஒரு நல்ல வேலைக்காரனின் முதன்மையான கடமையாகும். கீழ்ப்படிதல் இல்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம். பவுல் ரோமக் கிறிஸ்தவர்களுக்கு சொல்லும் போது " முன்னே நீங்கள் பாவத்திற்கு அடிமைகளாயிருந்தும் இப்பொழுது உங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட உபதேச சட்டத்திற்கு நீங்கள் மனப்பூர்வமாய்க் கீழ்ப்படிந்ததினாலே தேவனுக்கு ஸ்தோத்திரம், பாவத்தினின்று நீங்கள் விடுதலையாக்கப்பட்டு நீதிக்கு அடிமைகளானீர்கள்" (ரோமர் 6:17,18). பேதுரு இதை சத்தியத்திற்குக் கீழ்ப்படிகிறதாகச் சொல்கிறார் (1பேதுரு 1:22,23). நம்முடைய அருமை இரட்சகர் இந்த பூமியில் வாழ்ந்த நாட்களில் பிதாவுக்கு எல்லாவிதத்திலும் கீழ்ப்படிந்தார். அவர் தேவனுடைய குமாரனாயிருந்தும் பட்ட பாடுகளினாலே கீழ்ப்படிதலை கற்றுக் கொண்டார். மேலும், ஒரு நல்ல வேலைக்காரன் தன்னுடைய எஜமானுடைய எல்லாக் கட்டளைகளுக்கும் கீழ்ப்படிகிறான். எனவே, கிறிஸ்துவின் நல்ல வேலைக்காரர்கள் சபை கூடிவருதலை விட்டு விடக்கூடாது என்ற கட்டளைக்குக் கீழ்ப்படிகிறார்கள் (எபிரெயர் 10:25); வாரத்தின் முதல் நாள் கர்த்தருடைய பந்தியில் பங்கு பெற வேண்டும் (அப். 20:7); வாரத்தின் முதல் நாள் தன் மனதில் நியமித்தபடியே கர்த்தருக்குக் கொடுக்க வேண்டும் (I கொரிந்தியர் 16:12; II கொரிந்தியர் 9:7) அது மாத்திரமல்ல, முழு உலகத்திற்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள் என்ற கட்டளைக்கும் கீழ்ப்படிய வேண்டும் (மத்தேயு

28:19,20; மாற்கு 16:15,16). மேற்கூறிய காரியங்களை நாம் செய்யாமல் எப்படி அவருடைய வேலைக்காரர்கள் என்று சொல்லிக்கொள்ள முடியும்?.

## II ஜாக்கிரதை

ஒரு நல்ல வேலைக்காரன் தன்னுடைய எஜமானுடைய சித்தம் அல்லது விருப்பம் என்ன என்பதை அறிந்து கொள்ள ஆசையாயிருக்கிறான். இந்த காரணத்திற்காக அவன் வேதாகமத்தின் நல்ல மாணவனாயிருக்கிறான். பவுல் தீமோத்தேயுவுக்கு சொல்லும்போது, நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும், சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனாயும் உன்னை தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு என்று அறிவுறுத்துகிறார் (II தீமோத்தேயு 2:15). ஒரு நல்ல வேலைக்காரன், அவருடைய சேவையில் ஜாக்கிரதையாயிருந்து, ஆவியிலே அனலாயிருந்து; கர்த்தருக்கு ஊழியஞ் செய்ய வேண்டும் என்று பவுல் சொல்கிறார். நாம் இந்த இளைப்பாறுதலில் பிரவேசிக்க ஜாக்கிரதை மிக அவசியமானதாகும் (எபிரெயர் 4:1,11). சோம்பேறியான வேலைக்காரர்கள் புறம்பான இருளில் தள்ளப்படுவார்கள் (மத்தேயு 25:26,30). நம்முடைய அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும் உறுதியாக்கும்படி ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். பேதுரு சொல்லும் போது, “ஆகையால் சகோதரரே, உங்கள் அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும் உறுதியாக்கும்படி ஜாக்கிரதையாயிருங்கள்; இவைகளைச் செய்தால் (மேற்கூறப்பட்ட கிருபைகளை) நீங்கள் ஒருக்காலும் இடறி விழுவதில்லை” (II பேதுரு 1:10) என்கிறார்.

## III தைரியம்

மோசே நாற்பது வருடங்களாக தேவனுடைய வேலைக்காரனாக இருந்த பிறகு, அதாவது, மோசேயின் மரணத்திற்குப் பிறகு தேவன் இஸ்ரவேல் ஜனங்களை வழிநடத்தும்படி யோசுவாவைத் தெரிந்து கொண்டு பலங்கொண்டு திடமனதாயிரு என்று சொல்லி தேவன் யோசுவாவைத் தைரியப்படுத்தினார் (யோசுவா 1:6). மேலும், பேதுரு கிறிஸ்தவர்களை தங்கள் விசுவாசத்தோடு தைரியத்தை கூட்டி வழங்குங்கள் என்று புத்தி மதி சொல்கிறார் (II பேதுரு 1:5). பேதுருவும், யோவானும் இயேசுவின் நாமத்தைக் குறித்து எவ்வளவும் பேசவும், போதிக்கவும் கூடாதென்று கட்டளையிடப்பட்டார்கள். ஆனால், அதற்குப் பேதுருவும், யோவானும் பயப்படாமல் இயேசுவின் நாமத்தைக் குறித்து தைரியமாய்ப் பேசினார்கள். ஓர் இராணுவ வீரன் எப்படி தன்னுடைய தளபதியின் கட்டளையின்படி செயல்படுவானோ அதுபோல நாம் நம்முடைய தளபதியாகிய கிறிஸ்துவின்

கட்டளைகளுக்குக் கீழ்ப்படிய வேண்டும். அப்படிச் செய்ய அந்த வீரனுக்கு எப்படி துணிச்சலும், தைரியமும் தேவைப்படுகிறதோ அதேபோல நமக்கும் அந்த துணிச்சலும், தைரியமும் தேவை.

## IV அர்ப்பணிப்பு

பழங்கால இஸ்ரவேல் தேசத்தில் வேலைக்காரன் ஒருவன் தன்னுடைய எஜமானை விட்டுப் பிரிய மனதில்லாதிருந்தால் அவனுடைய சரீரத்தில் நிரந்தரமாக குறி அல்லது அடையாளம் போடப்படும் (யாத்திராகமம் 21:1-6). அவன் தன்னுடைய சரீரத்தில் எஜமானுடைய அடையாளத்தைத் தரித்துக்கொள்ளு கிறான். அப்போஸ்தலனாகிய பவுல் தான் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் அச்சடையாளங்களை தன்னுடைய சரீரத்திலே தரித்துக் கொண்டிருக்கிறதாகச் சொல்கிறார். (கலாத்தியர் 6:17). அவர் தன்னுடைய எஜமானைப் பிரியப்படுத்தவே நாடினார் (கலாத்தியர் 1:10). பிரியமான வாலிபர்களே! நீங்கள் இது போன்ற குணாதிசயங்களைப் பெற்றிருக்கிறீர்களா? அவருக்கு ஊழியக்காரனாயிருப்பது என்பது ஒரு ராஜாவாக இருப்பது போன்றதாகும். பேதுரு இதுபற்றிச் சொல்லும்போது " நீங்களோ உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளி யினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக் கும்படி தெரிந்து கொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள் " என்று சொல்கிறார். நாம் முழுமையான சுதந்திரத்தை பெற ஒரே வழி அவருக்கு அடிமை யாக இருப்பது தான் (யோவான் 8:36; ரோமர் 6:18,22).

ஆகையால், அன்பான வாலிபர்களே! மேலே பார்த்த கருத்துக்களின்படி நாம் உண்மையாகவே தேவனுடைய வேலைக் காரர்களாக இருக்கிறோமா என்று எண்ணிப்பார்ப்போம். வேலைக்காரர்களாக மாற தீர்மானம் எடுப்போம்.

**BENNY MARTIN**

## நான் யார்?

1. நானும், என் கணவரும் தேவனுக்கு முன்பாக நீதியாகவும், குற்றமற்றவர் களாகவும் நடந்தோம் (லூக். 1:6).
2. முதிர் வயதில் எனக்கு ஒரு குழந்தை பிறந்தது. (லூக். 1:7,24,57).
3. என் குமாரன் இயேசுவுக்கு வழியை ஆயத்தப்படுத்தினான். (லூக். 1:17).
4. இயேசுவின் தாயாகிய மரியாளுக்கு நான் உறவில் முறையாள் (லூக். 1:36).
5. என் கணவர் பெயர் சகரியா (லூக். 1:5).

சிறுவர் பகுதி

# தொல்பொருள் ஆராய்ச்சியும் வேதாகமும்

எனதருமை சிறு தம்பி தங்கைகளே! உங்கள் யாவருக்கும் ஆண்டவர் இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள். இம்மாதமும் இச்சிறுவர் பகுதி மூலமாக உங்களைச் சந்திப்பதில் மகிழ்ச்சியடைகிறேன். இந்த மாதம் நாம் வேதாகமும், அதின் காரியங்களும் உண்மையென்று சில ஆதாரங்களைக் கொண்டு படிக்கவிருக்கிறோம். சரி, நாம் பாடத்திற்குள்ளாக கடந்து செல்லுவோமா!.

வேதாகமம் தேவனுடைய வார்த்தையை மட்டுமே கொண்டுள்ளது என்பது அனைவருக்கும் தெரிந்ததே. அதனால், அதில் சொல்லப்பட்டிருக்கும் எந்த சம்பவங்களானாலும், அதில் உள்ள எல்லாமே உண்மையாய் இருக்க வேண்டும். வரலாறுகளில் நாம் பார்க்கும் பொழுது, எல்லா காலங்களிலும் வேதாகமும் அதிலுள்ள யாவும் சரியே என்று தொல்பொருள் ஆராய்ச்சி கூறுகிறது. (தொல் பொருள் ஆராய்ச்சி என்பது-ஆதிகால பொருட்களின் ஆராய்ச்சி) சரி, அது எப்படி என்று மூன்று உதாரணங்களைக் கொண்டு பார்ப்போம்.

முதலாவதாக, மோசே தான் வேதாகமத்தின் பழைய ஏற்பாட்டில் முதல் ஐந்து புத்தகங்களையும் எழுதினார் என்று நாம் வேதத்தின் மூலம் அறிகிறோம். தேவன் உரைத்ததை எல்லாம் மோசே எழுதினதினால், இதை மோசேயின் பிரமாணங்கள் என்றும் கூறுகிறோம் (யாத். 17:14) ஆனால், வேதத்தை நம்பாத சில கூட்ட ஜனங்கள் மோசே, முதல் ஐந்து புத்தகங்களையும் எழுதியிருக்க வாய்ப்புகள் இல்லையென்று கூறுகிறார்கள். அதற்கு அவர்கள் கூறும் காரணம் என்னவென்றால், அந்தக் காலத்திலே எழுதும் கலை கண்டுபிடிக்கப்படவில்லையென்று கூறுகின்றனர். ஆனால், 1933-ம் ஆண்டில் J.L. STARKEY என்பவர் ஒரு பழமையான பட்டணத்தைக் கண்டுபிடித்து அதை யோசுவா கைப்பற்றிய கானான் தேசத்தில் இருந்ததாகக் கூறுகிறார். அந்தப் பட்டணத்தின் பெயர் (Lachish) லாகிஸ். அந்த லாகிஸ் என்ற இடத்திலே Starkey என்பவர் மண்ணால் செய்யப்பட்ட ஒரு பானையின் மீது பதினோரு எழுத்துக்கள் செதுக்கியிருப்பதைக் கண்டார். அந்த எழுத்துக்கள் எபிரெய மொழி என்பதையும் கண்டுபிடித்தார். அந்த சம்பவத்திற்கு சில ஆண்டுகளுக்கு முன்பு, பிரான்சு நாட்டைச் சார்ந்த தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் மோசே பிறப்பதற்கு நூறு ஆண்டுகளுக்கு முன்பாக எழுதப்பட்ட சில சுவடுகளிலிருந்த எழுத்துக்களைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். எனவே, மோசேயின் காலத்திற்கு முன்பாகவே எழுதும் கலை இருந்துள்ளது. ஆகையால், இந்த ஐந்து புத்தகங்களையும் மோசே தான் எழுதினார் என்பதற்கு

இவைகள் சான்றாக இருக்கின்றன. இந்த உண்மையை மோசே இப்புத்தகங்களை எழுதவில்லை என்று கூறுகிறவர்கள் கூட ஒப்புக் கொள்ள முடியும்.

*இரண்டாவதாக,* சிலர் ஏசாயா புத்தகத்தில் ராஜாவாகிய சர்கோன், அசீரியாவின் ராஜாவாக (20:1) இருந்துள்ளான் என்பது பற்றி தவறாக எழுதியுள்ளார் என்று கூறுகின்றனர். ஏன் என்று அவர்களை கேட்டால், வரலாறு அப்படி ஒரு ராஜாவை குறிப்பிட வில்லை என்று கூறுகிறார்கள். ஆனால் 1843ம் ஆண்டு பிரான்சு நாட்டைச் சேர்ந்த இரண்டு தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் (Paul Botta, Austen) சர்கோன் ராஜாவின் அரண்மனையை முழுவதும் கண்டுபிடித்துள்ளனர். அந்த அரண்மனையும், பட்டணங்களும் 706 B.C. யில் கட்டப்பட்டது என்பதையும் கண்டுபிடித்துள்ளனர். அந்த அரண்மனையின் சுவர்களில் ராஜாவைப் பற்றிய குறிப்பு களும், காலங்களும் எழுதப்பட்டுள்ளன. இன்றைக்கும் அந்தச் சுவரின் சில பகுதிகள் Oriental Institute என்ற பல்கலைகழகத்தில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது. எனவே ஏசாயா தவறு செய்துவிட்டார் என்று எவரும் சொல்ல முடியாது.

*மூன்றாவதாக,* ஏத்தியர்கள் என்ற ஒரு கூட்ட ஜனம் வேதத் தில் 40 முறை குறிப்பிடப்பட்டுள்ளனர். அவர்கள் ஒருமுறை சீரியர்களை இஸ்ரவேலிருந்து துரத்தினவர்கள் (II ராஜா 7:6). ஆனால், வேதாகமத்தை ஒத்துக்கொள்ளாத சில பேர் ஏத்தியர் என்ற ஜனம் இல்லவே இல்லை என்கின்றனர். ஆனால் 1800களில் தொல்பொருள் ஆராய்ச்சியாளரான Hugh A.H. Sayce என்பவர் சீரியா பட்டணத்தில் கண்டுபிடித்த சில எழுத்துக்களை ஆராய்ந்த பொழுது அதில் ஏத்தியர்கள் குறிப்பிடப்பட்டிருந்ததைக் கண்ட றிந்தார். பின்பு 1906 ஆம் ஆண்டு Hugh wincklar என்பவர் ஏத்தி யர்களின் தலைநகரம் தற்போதைய துருக்கியில் இருப்பதை கண்டுபிடித்துள்ளார். மேலும், அந்த இடத்திலிருந்து பத்தாயிரத் திற்கும் மேற்பட்ட கல் சுவடுகளைக் கண்டுபிடித்தார். எனவே வேதாகம் தவறு என்று நாம் ஒருபோதும் கூற முடியாது.

கடைசியாக, எனதருமைத் தம்பி தங்கைகளே! இந்தத் தொல்பொருள் ஆராய்ச்சியின் மூலம் கண்டறிந்ததில் வேதாகமத் தின் அனைத்து சம்பவங்களும் உண்மையே என்று தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் கண்டிப்பாக ஒத்துக்கொள்கிறார்கள். அவர் கள் கண்டுபிடிக்கும் எல்லாக் காரியங்களும் வேதத்தோடு ஒத்துப் போகிறதேயல்லாமல், முரண்படுவதில்லை. எனவே தேவன் நமக்குக் கொடுத்த இந்த பொக்கிஷமாகிய இந்த வேதாகமத்தை உண்மையென்று நம்பாதவர்களிடத்தில், நாம் இது போன்ற காரியங்களை எடுத்துக்கூறி அவர்களை தேவனுடைய வார்த்தை களை நம்பும்படியாக மாற்ற வேண்டியது நம்முடைய கடமை. ஆகையால் நீங்கள் இந்த சிறுவயதிலிருந்தே இதுபோன்ற காரியங் களைச் செய்து தேவனுக்குப் பிரியமானதொரு வாழ்க்கை வாழ்ந்து அவரிடத்தில் ஆசீர்வாதம் பெறுங்கள். தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பார்! ஆமென்!

**ABEL. R. NAYAGAM**

# " தூருவின் சாட்சி " நூலில் இருந்து

## பாடம் - 5 (சென்ற மாதத் தொடர்ச்சி)

## வசன அடிப்படையிலான கொடுத்தலுக்கு பலன்

### III புதிய ஏற்பாட்டில் தேவன் பண்ணியிருக்கிற வாக்குத்தத்தங்கள்

நாம் இதுகாறும் விவாதித்த வாக்குத்தத்தங்களெல்லாம் பழைய ஏற்பாடு தானே என்ற ஆட்சேபணை இருக்குமானால், நாம் இப்போது புதிய ஏற்பாட்டு வாக்குத்தத்தங்கள் பற்றிப் பார்ப்போம். முதலாவது தேவனுடைய ராஜ்ஜியத்தையும், அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல் லாம் உங்களுக்கு கூட கொடுக்கப்படும். (மத். 6:33). இந்த வசனப்பகுதி கிறிஸ்து உணவு, உடை மற்றும் சரீரப்பிரகாரமான நன்மைகளைப் பற்றி பேசுவதாகத்தான் இருக்கிறது. இங்கே சீஷர்கள் வாழ்க்கையின் சரீரப்பிரகாரமான நன்மைகளைப் பற்றி அதிகம் கவலைப்பட்டனர். இயேசு அவர்களைப் பார்த்து முதலா வது தேவனுடைய ராஜ்ஜியத்தையும், அவருடைய நீதியையும் தேடுங்கள்! அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூட கொடுக்கப்படும் என்றார். நீங்கள் இதை ஒருபோதும் முயற்சி செய்யவில்லையென்றால், இதை உண்மையென்று சொல்வதற்கு நீங்கள் தகுதியானவர்களாக இருக்க முடியாது. இதை முயற்சி செய்தவர்கள் இது உண்மையென்று சாட்சி பகர்கிறார்கள். இதை விசுவாசியாத மனிதனை அற்ப விசுவாசியென்று இயேசு சொல்கிறார். ஒருவேளை, நீங்கள் விசுவாசியாதவர்களாயிருந் தால் உங்கள் விசுவாசம் பற்றி நம்முடைய ஆண்டவர் என்ன சொல்லுவார்? இப்பொழுது, லூக்கா நூலில் கர்த்தருடைய வாக்குத்தத்தம் என்னவென்று கவனிப்போம். கொடுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும். அமுக்கிக் குலுக்கி சரிந்து விழும்படி நன்றாய் அளந்து, உங்கள் மடியிலே போடுவார் கள். கர்த்தருக்குக் கொடுப்பதில் தாராளமாய் இருக்க மறுக்கும் ஒரு மனிதன், தான் புதிய ஏற்பாட்டை விசுவாசிக்கிறேன் என்று எப்படிச் சொல்ல முடியும்? நீங்கள் இதுகாறும் இந்த வசனத்தின் படி செய்யாமலிருந்தால், இன்றே செய்ய ஆரம்பியுங்கள்.

அப்பொழுது, பேதுரு அவரை நோக்கி; நாங்கள் எல்லா வற்றையும் விட்டு, உம்மைப் பின்பற்றினோமே; எங்களுக்கு என்ன கிடைக்கும் என்றான். அதற்கு இயேசு, மறுஜென்ம காலத்தி லே மனுஷகுமாரன் தம்முடைய மகிமையுள்ள சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கும் போது, என்னைப் பின்பற்றின நீங்களும், இஸ்ரவேலின் பன்னிரெண்டு கோத்திரங்களையும் நியாயத்தீர்க் கிறவர்களாக பன்னிரெண்டு சிங்காசனங்களின் மேல் வீற்றிருப்பீர் களென்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். என்

நாமத்தினிமித்தம் வீட்டையாவது, சகோதரரையாவது, சகோதரி களையாவது, தகப்பனையாவது, தாயையாவது, மனைவியை யாவது, பிள்ளைகளையாவது, நிலங்களையாவது விட்டவன் எவனோ, அவன் நூறத்தனையாய் அடைந்து, நித்திய ஜீவனை யும் சுதந்தரித்துக் கொள்ளுவான் (மத். 19:27-29). பேதுரு கேட்ட கேள்வியைக் கவனியுங்கள், ஆண்டவரே, எல்லாவற்றையும் விட்டு உம்மைப் பின்பற்றினோமே எங்களுக்கு என்ன கிடைக் கும்? இந்தக் கேள்வியைக் கேட்டதற்கு இயேசு பேதுருவைக் கடிந்து கொள்ளவில்லை. பேதுருவே, இந்தக் கேள்வியைக் கேட்டதற்காக நீ வெட்கப்பட வேண்டுமென்றும் சொல்லவில்லை. பேதுரு விட்டு வந்ததற்கு ஈடாக என்னத்தைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று கேட்பதற்கு அவனுக்கு உரிமை உண்டு என்பதைக் கர்த்தர் அறிந்திருந்தார். மறுஜென்ம காலத்திலே மனுஷகுமாரன் தம்முடைய மகிமையுள்ள சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கும் போது, என்னைப் பின்பற்றின நீங்களும், இஸ்ரவேலின் பன்னி ரெண்டு கோத்திரங்களையும் நியாயந்தீர்க்கிறவர்களாக வீற்றிருப் பீர்களென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்று பேதுருவிடம் சொன்னபோது கர்த்தர் புன்னகை பூத்திருக்க வேண்டும். அங்கே, அவர்களுக்குக் கிடைத்த உயர்வை எண்ணிப் பாருங்கள். அழுக்கடைந்த நாற்றம் பிடித்த மீன் படகுகளிலி ருந்து நேராக வல்லமையும், அதிகாரமும் கொண்ட சிம்மாசனம்.

தொடர்ந்து இயேசு, என் நாமத்தினிமித்தம் வீட்டையாவது, சகோதரர்களையாவது, சகோதரிகளையாவது, தகப்பனையா வது, தாயையாவது, மனைவியையாவது, பிள்ளைகளையாவது, நிலங்களையாவது விட்டவன், நூறுதனையாகப் பெற்று, நித்திய ஜீவனையும் சுதந்தரிப்பான் என்றார். நூறு மடங்கு என்பது ஆயிரம் சதவீத லாபம். இயேசுவின் இவ்வார்த்தைகள் ஒருவரை உற்சாகமாகவும், தாராளமாகவும் கொடுக்கத் துண்டுவதற்குப் போதுமானதாக இல்லையானால், கொடுக்க ஒருவனை ஊக்கப் படுத்துவதற்கு, எனக்குத் தெரிந்த வரை இதை விடச் சிறப்பாகச் செய்யவோ, சொல்லவோ முடியாது. ஆகவே, கொடுக்கிற காரி யத்தில் நீங்கள் முயற்சிக்கும்படியாய் உங்களை ஊக்கப்படுத்து கிறேன்.

பின்னும் நான் சொல்லுகிறதென்னவெனில், சிறுக விதைக் கிறவன் சிறுக அறுப்பான், பெருக விதைக்கிறவன் பெருக அறுப் பான். அவனவன் விசனமாயுமல்ல, கட்டாயமாயுமல்ல தன் மனதில் நியமித்தபடியே கொடுக்கக்கடவன்; உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார். மேலும், நீங்கள் எல்லாவற்றிலும் எப்பொழுதும் சம்பூரணமுடையவர்க ளாயும், சகலவித நற்கிரியைகளிலும் பெருகுகிறவர்களாயிருக் கும்படியாக, தேவன் உங்களிடத்தில் சகலவித கிருபையையும் பெருகச் செய்ய வல்லவராயிருக்கிறார் (II கொரி. 6-8). எல்லா விவசாயிகளுக்கும் தெரிந்த விதைப்பு, அறுப்பு விதி பற்றி

இங்கே பார்க்கிறோம். விதைகளை எண்ணி விதைத்தால் குறைவான அறுவடைதான் கிடைக்கும். நிறைய விதைத்தால் நிறைய அறுவடை இருக்கும். வசனம் 8-ல் பவுலடியார், தேவன், கொடுப்பதில் நம்மை சம்பூரணமுள்ளவர்களாக்க முடியும் என்று கூறுகிறார். அநேகரால், கொடுக்க முடியாமலிருப்பதற்குக் காரணம், அவர்கள் ஒருபோதும் கொடுத்ததில்லை. வசனம் 8-ஐ கவனமாக வாசித்து அது என்ன கூறுகிறதென்று பாருங்கள். தேவனாலே இதைச் செய்ய முடியுமென்று நீங்கள் விசுவாசிக்கிறீர்களா?

## IV தேவனுடைய வாக்குத்தத்தங்களில் விசுவாசத்தைக் காட்டுதல்

தங்களுடைய விசுவாசத்தைக் குறித்து பெருமை பாராட்டி, வேதாகமம் பேசுகிற இடத்தில் நாங்கள் பேசுகிறோம், அது மௌனமாயிருக்கும் இடத்தில் நாங்களும் மௌனமாயிருக்கிறோம் என்று சொல்லிக் கொண்டு “விசுவாசம் மாத்திரம்” போதும் என்று சொல்வதற்காகப் பிற சபையாரைக் கேலியும் செய்யும் கிறிஸ்துவின் சபை அங்கத்தினர்கள், தாங்கள் உபதேசத்திற்கு மாறாக, கொடுக்கிற காரியத்தில் கிரியைகளில்லாமல், கர்த்தருக்குக் கொடுப்பது பற்றிய போதனையை விசுவாசிப்பது மாத்திரம் போதும் என்று நினைக்கிறார்கள். இந்த ஜனங்கள் தாங்கள் கிறிஸ்துவை விசுவாசிப்பதாகச் சொல்லுகிறார்கள். ஆனால், தாராளமாய்க் கொடுக்கிறவர்களாக இருக்க மறுக்கிறார்கள். இப்படிப்பட்ட மனிதர்கள், நாங்கள் கிறிஸ்துவை விசுவாசிக்கிறோம், ஆனால், ஞானஸ்நானம் பெற்றும் கொள்ளமாட்டோம் என்பவர்கள் எப்படி மோசமானவர்களாக உள்ளார்களோ அதுபோலவே இவர்களும் மோசமானவர்களாயிருக்கிறார்கள்.

நாம் இப்போது தேவனுடைய வாக்குத்தத்தங்களை விசுவாசித்த தேவ மனிதர்கள் சிலர் பற்றி பார்ப்போம்.

1. ஆபிரகாம் - “ தேவனுடைய வாக்குத்தத்தைக் குறித்து அவன் அவிசுவாசமாய் சந்தேகப்படாமல் தேவன் வாக்குத்தத்தம் பண்ணினதை நிறைவேற்ற வல்லவராயிருக்கிறாரென்று முழு நிச்சயமாய் நம்பி, தேவனை மகிமைப்படுத்தி, விசுவாசத்தில் வல்லவனானான் ” (ரோமர் 4:20-21). ஆபிரகாம் தேவன் சொன்ன எது பற்றியும் ஒரு போதும் சந்தேகப்பட்டதில்லை. நம்முடைய விசுவாசத்தை பெலப்படுத்த நாம் தேவனிடத்தில் ஜெபிக்க வேண்டும்.

2. யோசுவா - “ இதோ இன்று பூலோகத்தார் எல்லோரும் போகிற வழியே போகிறேன்; உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களுக்குச் சொன்ன நல்வார்த்தைகளிளெல்லாம் ஒரு வார்த்தையும் தவறிப்போகவில்லை என்பதை உங்கள் முழு இருதயத்தாலும் உங்கள் முழு ஆத்துமாவாலும் அறிந்திருக்கிறீர்கள்; அவைகளெல்லாம் உங்களுக்கு நிறைவேறிற்று; அவைகளில் ஒரு வார்த்தையும் தவறிப் போகவில்லை ” (யோசுவா 23:14). தேவனுடைய

வாக்குத்தத்தங்களை அநேக வருடங்களுக்குத் தாங்கிப் பிடித்துக் கொண்டிருந்த ஒரு முதிர்ந்த மனிதனின் வார்த்தைகள் இவை. தேவன் இவருக்கு எதையும் பொய்யாக்கவில்லை.

3. சாறிபாத் விதவை - "அப்பொழுது எலியா அவளைப் பார்த்து; பயப்படாதே; நீ போய் உன் வார்த்தையின்படி ஆயத்தப்படுத்து; ஆனாலும் முதல் அதிலே எனக்கு ஒரு சிறிய அடையைப் பண்ணி என்னிடத்தில் கொண்டு வா; பின்பு உனக்கும் உன் குமாரனுக்கும் பண்ணலாம். கர்த்தர் தேசத்தின் மேல் மழையை கட்டளையிடும் நாள் மட்டும் பானையின் மா செலவழிந்து போவதும் இல்லை; கலசத்தின் எண்ணெய் குறைந்து போவதும் இல்லை என்று இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் எலியாவைக் கொண்டு சொன்ன வார்த்தையின்படியே, பானையிலே மா செல வழிந்து போகவும் இல்லை; கலசத்தின் எண்ணெய் குறைந்து போகவும் இல்லை", (Iராஜாக்கள் 17:13-16).

4. பவுல் - " ஆனபடியால் மனுஷரே, திடமானதாயிருங்கள் எனக்குச் சொல்லப்பட்ட பிரகாரமாகவே நடக்கும் என்று தேவனிடத்தில் நம்பிக்கையாயிருக்கிறேன்" (அப். 27:25). இங்கே கிறிஸ்துவுக்காக எல்லாவற்றையும் விட்டு வந்த ஒரு மனுஷனை நாம் பார்க்கிறோம். அவர் மரண தண்டனைக்காக ரோமாபுரிக்குச் செல்லும் போது கூட, தேவன் பேரில் தனக்கு இருந்த நம்பிக்கையை வெளிப்படுத்துகிறார். ஒரு சமயம், ஞாயிறு பள்ளியில், விசுவாசம் என்றால் என்ன என்று ஒரு சிறு பெண்ணிடம் கேட்கப்பட்டது. அதற்கு அவள், "எந்தக் கேள்வியும் கேட்காமல் தேவன் சொல்லுவதை நம்புவது தான் விசுவாசம்" என்று பதிலளித்தாள். இப்படிப்பட்ட விசுவாசம் தான் இன்றைய தேவை.

புதிய ஏற்பாட்டுக் கொடுத்தலை மீட்டமைக்க நீங்கள் தயாரா?

நம்முடைய சபைக்கு இயேசு வந்தால் எப்படியிருக்கும்? நம்முடைய அடுத்த சபை கூடி வருதலுக்கு இயேசு வந்தால் என்னவாயிருக்கும்?

அவர் எங்கே உட்காருவார்?

அவர் என்ன சொல்வார்?

நீங்கள் என்ன சொல்வீர்கள்?

நீங்கள் எதை அணிவீர்கள்?

நீங்கள் எப்படி செயல்படுவீர்கள்?

நீங்கள் எப்படி ஆராதிப்பீர்கள்?

"அது ஒருபோதும் நடைபெறாது" என்று நீங்கள் நினைக்கிறீர்கள். ஆயினும், மத்தேயு 18:20ல் இரண்டு பேராவது மூன்று பேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன் என்று இயேசு சொல்லியிருக்கிறார்.

இயேசு ஏற்கனவே சபையில் இருந்து கொண்டு வருகிறார்! கேள்வி என்னவென்றால்; நீங்கள் அடுத்த முறை ஆராதனையில் இருக்கும்போது எப்படி நடந்து கொள்வீர்கள்? இயேசு உங்கள் அருகில் இருக்கிறபடியால் ஆராதனையில் நீங்கள் எப்படி நடந்து கொள்வீர்கள்?.

# வசன ரீதியான கிறிஸ்துவின் சபை

தொடர் கட்டுரை

அன்புள்ள வாசகர்களே அனைவருக்கும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள்.

இன்றைய நாட்களில் கிறிஸ்துவின் சபைகளின் பெருக்கம் நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டிருக்கிறது என்பது மகிழ்ச்சியான விசயம். ஆனால் வசனத்தின் அடிப்படையில் அப்படி பெருகினால் பெருமகிழ்ச்சியாக இருக்கும். முதல் நூற்றாண்டில் யூதேயா, கலிலேயா, சமாரியா போன்ற பாலஸ்தீனத்தில் இருந்த நாடுகள் எங்கும் சபைகள் சமாதானம் பெற்று பக்தி விருத்தி அடைந்து கர்த்தருக்குப் பயப்படுகிறபயத்தோடும் பரிசுத்த ஆவியின் ஆறுதலோடும் நடந்து பெருகின! (அப். 9:31) சபை பரிசுத்த ஆவியின் ஆறுதலோடும் நடந்து பெருக வேண்டும் என்று பவுல் கூறகிறார். அதாவது, சபையின் வளர்ச்சிக்காகவும், ஆறுதலுக்காகவும் தேவன் கொடுத்து இருக்கின்ற பரிசுத்த வேதாகமத்தின் துணை கொண்டு வளர்ந்து பெருக வேண்டும். இதுவே வசன ரீதியான சபையாகும். அதாவது, சபைகளே இல்லாத இடங்களில் சுவிசேஷத்தை அறிவித்து சபையை உருவாக்க வேண்டும். இதுவே புதிய ஏற்பாட்டின் சட்டமாகும் (மாற்கு 16:15,16) புதிய ஏற்பாட்டின் வசன ரீதியான கிறிஸ்துவின் சபையை இந்த புதிய தலைமுறையினருக்கு எடுத்துக்காட்ட இந்த புதிய தொடர் கட்டுரை பயன்படும் என்று நம்புகிறேன்.

## பாடம் - 1 ஒரே சுவிசேஷம்

கிறிஸ்துவின் சுவிசேஷம் என்ற ஒரே நற்செய்தியின் மூலமாக நாம் இரட்சிக்கப்பட தேவன் நம்மை அழைத்திருக்கின்றார். (ரோமர் 1:16; II தெச. 2:14) அந்த ஒரே சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியும் பொழுது தேவன் சபையிலே சேர்க்கின்றார் (அப். 2:47) அந்த ஒரே சுவிசேஷம் சபையில் பிரிவினைகளையோ, கலகங்களையோ உண்டாக்குவதில்லை மாறாக சமாதானத்தை உண்டாக்குகின்றன. ஆகவேதான், சமாதான செய்தியாக சுவிசேஷம் உள்ளது என்று வேதம் கூறுகின்றது. (ரோமர் 10:15) நம்முடைய தேவன் கலகத்திற்கு தேவனாயிராமல் சமாதானத்திற்கு தேவனாயிருக்கிறார். பரிசுத்தவான்களுடைய சபைகள் எல்லாவற்றிலேயும் அப்படியே இருக்கிறது. (1 கொரி. 14:33) முதல் நூற்றாண்டில் இரட்சிக்கப்பட்டவர்கள் அனைவரும் பிரிவினைகள் இல்லாமல் ஏகமனதும், ஏகயோசனையும் உள்ளவர்களாய் சீர்பொருந்தியிருக்கவும் வேண்டும் என்று கர்த்தராகிய இயேசு

கிறிஸ்துவின் நாமத்தினாலே (அதிகாரத்தினாலே) புத்தி சொல்லப் பட்டது. (1கொரி. 1:10) இந்த 21 ஆம் நூற்றாண்டிலேயும் நமக் கும் இயேசுவின் அதிகாரத்தினாலே புத்தி சொல்லப்படுகிறது. ஆனால், இன்று இப்படிப்பட்ட புத்திமதிகளை கேட்பதுமில்லை ஐக்கியத்தை விரும்புவதுமில்லை! ஆதலால் சபையில் பிரிவினை களும், பிரச்சனைகளும் அதிகரித்து சபை உடைந்து விடுகின்றன. இதனால் சபை முழு வளர்ச்சியைக் காணாமல் இன்று பரிதாப மாக நிற்கிறது! இப்படிப்பட்ட பரிதாபத்திற்குக் காரணம் யார் என்றால் அப்பாவி விசுவாசிகளைத் தவறாகப் பயன்படுத்தும் சில முன்னோடிகளே ஊழியக்காரர்கள் தங்களின் சுய பிரயோஜ னத்தையும் சொகுசான வாழ்க்கையும் நினைக்கின்றனர். சபை யைக் குறித்தோ சபையின் எதிர்கால வளர்ச்சியைக் குறித்தோ, கொஞ்சம் கூட நினைப்பதில்லை என்பது எனது கசப்பான அனுபவம். கிறிஸ்துவின் ஒரே சுவிசேஷமானது சொகுசான வாழ்க்கையைத் தருவதில்லை மாறாக எல்லாவற்றையும் தியாகம் செய்யும்படி கூறுகிறது. இயேசு கிறிஸ்து தன்னை யேத் தியாகம் செய்தார். அப்போஸ்தலர்கள் இரத்த சாட்சிகளாகத் தங்களை அர்ப்பணித்தனர். முதல் நூற்றாண்டில் வாழ்ந்த கிறிஸ்த வர்கள் பல இன்னல்களுக்கும், துன்பங்களுக்கும் தங்களை ஒப்புக் கொடுத்தனர் என்று சுவிசேஷ வரலாறு நமக்குத் தெரிவிக்கிறது. இவர்கள் எல்லாரும் தங்களை பணயம் வைத்து சபையை வளர்ச் சிப் பாதையில் கொண்டு சென்றதால் இன்றும் கிறிஸ்துவின் சபை நிலைத்திருக்கிறது.

ஆனால், இன்று கிறிஸ்துவின் சபைக்காக நாம் என்ன செய் கின்றோம்! எதிர்வரும் சந்ததியினருக்கு தேவனை ஆராதிப்ப தற்கு ஒரு சிறிய சபைக் கட்டிடம் கூட கட்டு வதில்லை! பிரசங்கி சொல்லுகின்றார் நான் பெரிய வேலைகளைச் செய்தேன் எனக் காக வீடுகளைக் கட்டினேன். திராட்சத் தோட்டங்களை நாட்டி னேன் என்று தன்னை குறித்து சொல்லிக் கொண்டே போகின்றார். இறுதியில் இவைகள் எல்லாம் மாயையும் மனதுக்குச் சஞ்சலமு மாயிருக்கிறது (பிரச. 2:4-11). தேவனுக்குப் பயப்படுவதும் அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுவதுமே மெய்யான தாக இருக்கிறது என்று கூறுகின்றார். (பிரச. 12:13) மேலும், எலிசா தீர்க்கதரிசி தனது வேலைக்காரன் கேயாசி சொகுசான வாழ்க்கையை விரும்பினதால் நாகமானின் குஷ்டரோகம் கேயாசிக்கும் அவனது சந்ததிக்கும் இருக்கும் என்று சபித்தார். (**II** இராஜா 5:26,27) இன்று சில நாமகரணக் கூட்ட சபைக் கட்டிடம் நூற்றாண்டுகளைக் காண்கிறது என்றால் அந்த சபையை ஸ்தாபிக்க வந்தவர்கள் தங்களுக்கென்று சொத்துக்களைக் குவித்தார்களா? அப்படிச் செய்திருந்தால் அந்த சபை நூற்றாண் டைக் காண முடியாது. அவர்கள் அந்த சபையை மேன்மைப் படுத்தித் தங்களை அடிமைப்படுத்தி வாழ்ந்தனர் என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்! உலகப்பிரகாரமான அந்த சபைக்கு

அவர்கள் அப்படிப் பிரயாசப்பட்டார்கள். பரலோகத்திற்குச் செல்லும் கிறிஸ்துவின் சபைக்கு நாம் என்ன செய்கிறோம்? சபையின் வளர்ச்சிக்கு பல தடைகளைச் செய்கின் றோம்! சகோதரர்களே இதுவா நாம் சபைக்கு ஆற்றும் பணி? கிறிஸ்து வின் ஒரே சுவிசேஷம் இப்படிப்பட்ட காரியங்களைச் செய்யாமல் நல்மனசாட்சியின் உடன்படிக்கையாயிருக்கிறது (மாற்கு 16:15,16; 1பேதுரு 3:21).

உடன்படிக்கை என்றால் ஒப்பந்தம் என்று பொருள். தேவன் முன்னொரு காலத்தில் இஸ்ரவேலரோடு ஒப்பந்தம் செய்ய பத்துக் கட்டளைகளைக் கொடுத்தார். (யாத். 34:26,27) அந்தக் கட்டளைகளைக் கொடுக்கு முன் ஜனங்களின் விருப்பத் தை அறிந்து கொள்ள தேவன் மோசேயிடம் இப்பொழுது நீங்கள் என் வாக்கை உள்ளபடி கேட்டு என் உடன்படிக்கையைக் கைக் கொள்வீர்களானால் சகல ஜனங்களிலும் நீங்களே எனக்குச் சொந்த சம்பத்தாயிருப்பீர்கள் பூமியெல்லாம் என்னுடையது என்றார். (யாத். 19:5) அதற்கு ஜனங்கள் எல்லாரும் ஏகமாய் கர்த்தர் சொன்னவைகளையெல்லாம் செய்வோம் என்றார்கள் (யாத். 19:8) ஆனால், அவர்கள் அந்த உடன்படிக்கையில் நிலைத் திராமல் மீறி நடந்தார்கள். (எரே. 11:10) தேவன் அவர்களைப் புறக்கணித்தார் (எபி. 8:9) இன்று நாம் சுவிசேஷத்திற்குக் கீழ்ப் படியும்போது ஞானஸ்நானத்தில் தேவன் நம்மோடு உடன்படிக் கைச் செய்கின்றார். (1 பேதுரு 3:21) இந்த புதிய உடன்படிக் கைக்கு இயேசு கிறிஸ்து மத்தியஸ்தரயிருக்கிறார். (எபி. 12:24) நாம் கிறிஸ்துவுக்குள் இருக்கும்பொழுது புது சிருஷ்டியாக மாற்றம் பெற்றிருக்கின்றோம் பழையவைகள் எல்லாம் ஒழிந்து போயின எல்லாம் புதிதாயின! (2கொரி 5:17) அதாவது நம்மு டைய பழைய, கெட்டுப்போகப்பண்ணும், மோசம் போக்கும் பழைய மனுஷனை கிறிஸ்துவோடு கூட சிலுவையில் அறைந்து விட்டோம். (எபே 4:22) பழைய பாவ மனுஷனுக்குரிய மாம்சத் தின் கிரியைகளை விட்டு மனந்திரும்பி, இயேசு கிறிஸ்து தேவனு டைய குமாரன் என்று பகிரங்கமாக வாயிலே அறிக்கையிட்டு, ஞானஸ்நானம் பெறும்பொழுது தேவன் நம்முடன் உடன் படிக்கை பண்ணுகிறார். அந்த உடன்படிக்கைக்குப் பாத்திரவான் களாக இருக்க வேண்டும். சபையிலே மாம்சத்தின் கிரியைக ளான விபசாரம், வேசித்தனம், அசுத்தம், காமவிகாரம், விக்கிரக ஆராதனை, பில்லி சூன்யம், பகைகள், விரோதங்கள், வைராக்கி யங்கள், கோபங்கள், சண்டைகள், பிரிவினைகள் மார்க்க பேதங் கள், பொறாமைகள், கொலைகள், வெறிகள், களியாட்டுகள் போன்ற பாவச் செயல்களைச் செய்தால் தேவன் நம்மையும் புறக் கணிப்பார்! (கலாத் 5:19-21).

கிறிஸ்துவின் ஒரே சுவிசேஷம் நம்மை பூரண வளர்ச்சிக்கு உந்தித் தள்ளுகிறது. மாம்சத்திலும் ஆவியிலும் உண்டான எல்லா அசுசியும் நீங்க நம்மைச் சுத்திகரித்துக் கொண்டு பரிசுத்தமாகு

தலை தேவ பயத்தோடே பூரணப்படுத்தக்கடவோம் என்று பவுல் எழுதுகின்றார். (II கொரி. 7:1) அதாவது சுவிசேஷம் நம்மை பரிசுத்தப்படுத்தி பூரணத்தை நோக்கி அழைத்துச் செல்லுகின்றது. ஆனால், நாம் மூல உபதேசத்தை மட்டுமே பிடித்துக் கொண்டு இருப்பதால் பூரணமாகாமல் இன்னும் குறைவுபட்டவர்களாகக் காணப்படுகிறோம் (எபி. 5:12-14) இதனால் அநேக சமயங்களில் சிறுபிள்ளைத் தனமாகவே நடந்துகொள்ளுகிறோம். இதன் காரணமாக கொரிந்து பட்டணத்தில் இருந்த கிறிஸ்துவின் சபையில் காணப்பட்ட கோஷ்டி பூசல்கள் இன்றும் உள்ளது. (I கொரி. 1:11,12) சபையின் வளர்ச்சிக்காக இப்படிப்பட்ட மாம்ச சிந்தைகளை விட்டு ஆவிக்குரிய சிந்தைகளை அணிந்து கொள்ள வேண்டும். ஏனெனில், மாம்ச சிந்தை மரணம் ஆவியின் சிந்தையோ ஜீவனும் சமாதானமுமாயிருக்கிறது (ரோமர் 8:6) முதல் நூற்றாண்டில், சபைகள் சமாதானம் பெற்றிருந்தபடியால் வளர்ந்திருந்தது. சபையின் வளர்ச்சிக்கு சமாதானம் மிகவும் முக்கியமாக உள்ளது. கிறிஸ்துவின் ஒரே சுவிசேஷம் சமாதானத்தின் செய்தியாக இருந்தபடியால் உலகமெங்கும் பரப்பி பலன் தந்தது (கொலோ. 1:6) அந்த ஒரே சுவிசேஷத்திற்கு நாம் கீழ்ப்படிந்தபடியால் சமாதான விரும்பிகளாக இருப்போம் நம்முடைய கர்த்தர் சமாதானப் பிரபு (ஏசாயா 9:6).

(தொடரும்) **K. பாஸ்கர்**

## அருமையான இரட்சகர்

1. ஆதியிலிருந்து இருக்கிறபடியால் அவர் அருமையானவர்
   – யோவான் 1:1–3
2. தன்னுடைய பிறப்பினால் அவர் அருமையானவர்
   –மத். 1:22,23
3. பூரணமான வாழ்க்கையினால் அருமையானவர்
   1பேதுரு 2:22
4. உபதேசத்தினாலும், சத்தியத்தினாலும் அருமையானவர்
   –மத். 7:28,29; யோவான் 14:6
5. தன்னுடைய தியாகத்தால் அருமையானவர் எபி. 1:18,19
6. தன்னுடைய உயிர்த்தெழுதலினால் அருமையானவர்
   – 1கொரி. 15:12
7. மீட்பின் திட்டத்தினால் அருமையானவர்
   – 1கொரி. 8:9

# ஆவிக்குரிய வாழ்விற்கான அளவுகோலை ஏற்படுத்துகிறது யார் ?

ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்கு பயணம் செய்வது எனக்கு மிகவும் விருப்பம். ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்கு, ஒரு பட்டணத்திலிருந்து மற்றொரு பட்டணத்திற்கு போகும் போது அங்கே, சட்டங்கள், பழக்கவழக்கங்கள், கலாச் சாரங்கள் போன்றவற்றில் மாற்றங்கள் இருக்கும் என்பது எனக்குத் தெரியும். நான் ஒரு அமெரிக்க பிரஜையாக இருந்தாலும் நான் செல்லும் தேசங்களிலுள்ள சட்டங்கள் என்னைக் கட்டுப்படுத்தும் என்கிற உண்மையை நான் அறிந்திருக்கிறேன். ஒவ்வொரு நாட்டிலுள்ள சட்டங்கள் எல்லாவற்றையும் குறிப்பாக அறிந்து கொள்வது எனக்கும் அல்லது வேறுயாருக்கும் முடியாத காரியம். இது உண்மையாக இருக்கிறபடியால், இது கீழ்க்காணும் கேள்வி களை எழுப்புகிறது.

1. இந்த தேசங்களின் சட்டங்களை நான் முழுமையாக அறிய வில்லை என்றாலும் அந்த சட்டங்களுக்கு நான் பொறுப் பாளியா? ஆம்
2. அந்தச் சட்டங்களை கற்றுக்கொள்வதற்கு எனக்கு நேரம் இல்லை என்றாலோ அல்லது அவைகளை கற்றுக்கொள்ள மறுத்தாலோ அதற்கு நான் பொறுப்பாளியா? ஆம்.
3. என்னுடைய அபிப்பிராயங்கள், உணர்வுகள் அல்லது என் தேசத்தின் கலாச்சாரமோ, அந்தச் சட்டங்களை மாற்ற முடியுமா அல்லது எனக்கேற்ப அந்தச்சட்டங்கள் மாற்றப் படுமா? மாற்றப்படாது.
4. இந்த தேசங்களுக்குள் நான் சட்டத்தை மீறினால், என் அறியா மைக்கு விதிவிலக்கு அளிக்கப்படுமா? இல்லை

நம்மால் இனியும் கூடுதலான கேள்விகளை கேட்க முடியும், ஆனால், நம்மெல்லாருக்கும் நான் சொல்கின்ற கருத்து புரியும் என நினைக்கிறேன். இந்த தேசங்கள், அது எந்த தேசமாக இருந் தாலும் சரி, அந்த தேசத்திற்குள் இருக்கும் எல்லோரும் கீழ்ப்படிய வேண்டும் என ஒரு தரத்தை ஏற்படுத்தியிருக்கின்றன. எல்லா மக்களும், அவர்கள் அந்த நாட்டு குடிமக்களாக இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி அந்த குறிப்பிட்ட ஒரு நாட்டிலே ஏற்படுத் தப்பட்டிருக்கின்ற தரத்திற்கு பொறுப்பாளிகளாயிருக்கிறார்கள்.

இது தேவனோடு நாம் கொண்டிருக்கும் உறவிலும் வெளிப்படையாகவே உண்மையயிருக்கிறது. தேவன் ஒரு அளவுகோலை ஏற்படுத்தியிருக்கிறார். அதை தேவ ஆவியினால் ஏவப்பட்ட வேதாகமத்தில் நாம் கண்டுகொள்ள முடியும். ஒவ்வொருவரும் தேவன் ஏற்படுத்தியிருக்கிற அளவுகோலுக்கு பொறுப்பாளியாக இருக்கிறார்கள். அவர்கள் அதை அறிந்தாலும் சரி, அறியாவிட்டாலும் சரி, அது அவர்கள் அதை கற்றுக் கொள்ள நேரத்தை ஒதுக்கினாலும் சரி, ஒதுக்காவிட்டாலும் சரி எல்லோரும் தேவனுடைய அளவுகோலுக்கு கணக்கு ஒப்புவிக்க வேண்டும். என்னுடைய அபிப்பிராயங்கள், உணர்வுகள், அல்லது கலாச்சாரம் தேவனுடைய அளவுகோலை மாற்றாது. அதே போல எனக்கேற்றவாறு தேவன் தம்முடைய அளவுகோலை மாற்ற மாட்டார். தேவன் பாவமில்லாத தம்முடைய ஒரே பேறான குமாரனை காப்பாற்றும்படியாக தம்முடைய திட்டத்தை மாற்ற வில்லை என்றால், உங்களையும் என்னையும் காப்பாற்றும் படியாக தம்முடைய திட்டத்தை மாற்றமாட்டார் என்பதை நினைத்துப்பாருங்கள் (எபிரெயர் 5:7-9). அறியாமை ஒரு விதிவிலக்காக சாக்காக அமையாது (அப். 17:30). இது உண்மை யென்று நாம் அறிந்திருக்கிறபடியால், மற்றவர்கள் ஆயத்தமாகும் படி நாம் அவர்களுக்குச் சொல்ல இது நம்மை ஏவ வேண்டும் (II கொரி 5:10-11).

நம் தேவனுடைய திட்டம் அவருடைய முடிவில்லாத ஞானத்தையும், அன்பையும் நிரூபிக்கிறது. நமக்கு போராட்டங் கள் உண்டாகும் என்பதை தேவன் அறிந்திருந்தபடியால் தான் தம் குமாரனுடைய மரணத்தின் மூலமாக மனித இனத்திற்கு அவர் மன்னிப்பை ஏற்படுத்தியிருக்கிறார். நாம் எப்படி வாழவேண்டும் என மிகச் சிறந்த மாதிரியை இயேசு நமக்கு வைத்துவிட்டு, மனித இனம் தேவனோடு ஒப்புரவாகுவதற்கு ஒரு வழியை உண்டாக்கு வதற்காக அவர் மரித்தார். இயேசு நம் ராஜாவாக இருக்கிறபடி யால் அந்த அதிகார அளவுகோலுக்கு நாம் தாழ்மையாகக் கீழ்ப் படிவதே நமக்கு ஒரே வழி.

பாவ மன்னிப்பைப் பெற்றுக் கொள்வதற்காக நம் விசுவாசத்தைக்கொண்டு கிறிஸ்து இயேசுவுக்குள் ஞானஸ்நானம் பெறும்போது, தேவன் நம்மை மன்னித்து கிறிஸ்து எந்த சபை யைக் கட்டும்படி வந்தாரோ அந்த சபையிலே நம்மைச் சேர்த்துக் கொள்வார் என்கின்ற நம்பிக்கை நமக்கு இருக்கிறது. கொலோ 2:12; மத்தேயு 16:18; அப். 2:38-47; 20:28.

நம் வாழ்க்கையில் சோதனைகள் எவ்வளவு பெரிதாக இருந்தாலும் நமக்கு உதவிட ஆறுதலையும், பெலத்தையும் நாம் இங்கே கண்டுகொள்ள முடியும்.

***Bob*** ***Benny***

## "கிருபையுள்ள வார்த்தை" தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்


பேச்சாளர் : சகோ. பிலேமோன் ராஜா, மதுரை.

| | | | |
|---|---|---|---|
| Z தமிழ் | TV | வெள்ளி | காலை 5:30 மணி |
| தமிழன் | TV | ஞாயிறு | காலை 7:45 மணி |

## "கிறிஸ்துவின் வசனம்" தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்

பேச்சாளர் : சகோ. அர்ச்சுனன், வத்தலக்குண்டு.

| | | | |
|---|---|---|---|
| தமிழன் | TV | திங்கள் | காலை 6:00 மணி |
| இமயம் | TV | புதன் | காலை 6:30 மணி |



## HEAR THE VOICE OF TRUTH ON RADIO SRILANKA

| LANGUAGE | DAYS | TIME | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| HINDI | Thursday Sunday | 6.45 - 7.00 a.m. | Box. 3815 New Delhi - 110049 | Sunny David |
| TELUGU | Sundays, Mondays, Tuesdays, Thursdays, | 2.00 - 2.15 p.m. | Box. 80 Kakinada - 533 001 | Joshua Gootam |
| TAMIL | Mondays, Tuesdays, Thursdays, Fridays, | 5.30 - 5.45 p.m. | Box. 8405 Bangalore-560 084 | P.R. Swamy |
| MALAYALAM | Fridays | 3.45 - 4.00 p.m. | Box. 5540 Thiruvananthapuram - 695 034. | P.K. Varghese |

Regd. News Paper RNI No. 47661/87- Postal Regn. No. Erode/26/2009-2011
Posted at Erode HPO on 20/21 of Every Month.

# திருமறை தியானம்

## தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தமிழன் | TV | திங்கள் | காலை | 7:00 | மணி |
| இமயம் | TV | வியாழன் | காலை | 6:00 | மணி |
| தமிழன் | TV | சனி | காலை | 7:15 | மணி |

# வேதாகம அஞ்சல் வழிக் கல்வியில் ஒரு புதிய அத்தியாயம்

- Advanced Bible Correspondence Course -

**பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்க விரும்புபவர்களுக்கு இது ஓர் அரிய வாய்ப்பு.**

ஆம், வேதாகமமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு ஏழு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட 100 பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.

விருப்பமுள்ளவர்கள் தபால் செலவுக்கு
ரூ. 100/- மணியார்டர் அனுப்பி பதிவு செய்து கொள்ளவும்.

எங்களிடம் ஏற்கனவே அஞ்சல் வழிக்கல்வி **BASIC BIBLE COURSE** படித்து முடித்தவர்களும், படிப்பவர்களும் இதில் சேர்ந்து பயன் பெறலாம்.

இயக்குனர்

## அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

த.பெ.எண் 27, காங்கேயம் 638-701.
தமிழ்நாடு , இந்தியா.

Printed by : K.C. Senthilkumar, at Sun Offset Printers, 50 Kovai Road, Kangayam - 638 701.
Editor: S. Rajanayagam.